புதுவாழ்வு

ஆசிரியர்

க. அன்பழகன், எம். ஏ.

This page is in colour

புதுவாழ்வு

மாலை 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆடி 1 | மலர் 7

ஆசிரியர் : க. அன்பழகன் எம்.ஏ.,

துணை ஆசிரியர் : ஜே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

கவிஞரின் அழைப்பு	...	2
போர்க்களம் புகுமுன்	...	3
குளிர் செந்தீ!	...	10
நீதிக் கொலை	...	11
வாபஸ் பெறுக	...	13
வள்ளுவன் மகள்	...	15
புத்தகசாலை	...	17
வீரன் புருனோ	...	24
எல்லைகடந்த இன்பம்	...	32
பொற்சிலை	...	37
அவள்?	...	43
உரைகல்	...	47

10, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை - 7.

விலை அணா 4

16—ஜூலை
1948

கவிஞரின் அழைப்பு

வாரீர்!

(ஆநந்தக் களிப்பு மெட்டு)

இந்தி எதிர்த்திட வாரீர்—நம்
இன்பத் தமிழ்தனைக் காத்திட வாரீர் (இந்தி)

மூந்திய காலத்து மன்னர்—நம்
முத்தமிழ் நாட்டினில் தொத்திடு நோய்போல்
வந்தவடமொழிதன்னை—விட்டு
வைத்ததனால்வந்த தீமையைக் கண்டோம்.
(இந்தி)

செந்தமிழ் தன்னில் இல்லாத—பல
சீமைக் கருத்துக்கள் இந்தியில் உண்டோ?
எந்த நலம் செய்யும் இந்தி—எமக்
கின்பம் பயப்பது செந்தமிழன்றோ. (இந்தி)

தென்னாடு தான்எங்கள் நாடு—நல்ல
செந்தமிழ் தான்எங்கள் தாய்மொழி யாகும்
புன்மைகொள் ஆரிய நாட்டை—எங்கள்
பொன்னாட்டி னோடு பொருத்துதல் ஒப்போம்.
(இந்தி)

இன்னலை ஏற்றிட மாட்டோம்—கொல்லும்
இந்தியப் பொதுமொழி இந்தி என்றாலோ
கன்னங் கிழிந்திட நேரும்—வந்த
கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம்.
(இந்தி)

—புரட்சிக் கவிஞரது 'தமிழ்'

போர்க்களம் புகுமுன்

தாழ்வுற்றுக் கிடந்த தமிழகம் இன்று தலைநிமிரத் தொடங்கியுள்ளது. மக்களின் எண்ணத்திலே மாறுதல், போக்கிலே புதுமை வாழ்க்கையிலே மறுமலர்ச்சி — இவை இன்றையக்காட்சி. இத்தகைய நன்னிலை இதற்குமுன் ஏற்பட்டதில்லை. இந்த நிலை காணச் சகிக்கவில்லை இன்று ஆளவந்தார்க்கு.

தமிழ்மொழிப் பற்றும் வளர்ந்து படிப்பவர் தொகையும் பெருகி, இனி தாய்மொழியே நமையாளும் என்ற எண்ணம் தமிழர் உள்ளத்துக்குக் களிப்பூட்டத் தொடங்கிற்று. இதைக்காணப் பொறுக்கவில்லை இன்று ஆட்சிப்பீடம் ஏறியுள்ளவர்களுக்கு.

தென்னாடும் இனி ஏற்றமுறும், தமிழ்நாடும் இனி வாழ்வு பெறும், வடநாட்டார் ஆதிக்கம் இனியும் நிலைக்கமுடியாது என்ற நம்பிக்கை, மக்கள் மனதிலே அரும்பத் தொடங்கிற்று. அந்த அரும்புகளையும் விட்டுவைக்க மனமில்லை, இன்று அமைச்சர்களாகவுள்ள அவசரக்காரர்களுக்கு.

தமிழ் முதல்மொழியானால் — தமிழ் மக்களே முன்னேறுவர், தாழ்த்தப்பட்டோரும், ஒடுக்கப்பட்டோரும் இனி உலகாளுவர், சாதி பேதம் தொலைந்து சமத்துவம் தழைக்கும், அன்பு வளரும், ஒற்றுமை நிலைக்கும் என்று தமிழறிஞர் கொண்ட மகிழ்ச்சியை வளரவிட மனமில்லை, இன்று ஆதிக்க வெறியிலே ஆடிக்கிடப்பவர்களுக்கு.

எனவேதான் உண்ணும் உணவிலே மண்ணள்ளிப் போடுவதுபோல, அரைத்த சந்தனத்திலே சாணத்தைக் கலப்பதுபோல, மணவீட்டிலே ஒப்பாரி வைப்பதுபோல — தமிழ் நாட்டிலே, தமிழ் தன்னுரிமை எய்தும் அதே சமயத்தில் — தமிழ்ப்பிள்ளைகள் தமிழொடு ஆங்கிலம் பயில்வது போதாதென்று — ஒன்றுக்கும் உதவாத, உலகறியாத, உயர் இலக்கியமில்லாத, ஓசைநயம் தோன்றாத, வாய்க்கு வாராத, வந்தாலும் வெறுப்பை விளைவிக்கத் தவறாத, கலப்படத்தால் தோன்றிய இலம்பாடி மொழியான — இந்துஸ்தானியையும் பயின்றாக வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளனர்.

இன்றோ, இந்துஸ்தானி இரண்டாவது மொழியாம். ஆங்கிலம், அறிவுக் களஞ்சியமான உலகமொழி மூன்றாவது.

மொழியாம். இரண்டாவது மொழியாக - அந்நிய மொழிகளான தெலுங்கு வடமொழி இந்துஸ்தானி உருது பார்சி முதலிய மொழிகளில் எதையுமே படிக்க விருப்பமற்ற தமிழ் மண்டல மாணவர்கள் -- அதற்குப் பதிலாகவும் தமிழே பயிலலாம் என்று கல்வி அமைச்சர் கூறியிருந்தார் முதலிலே. ஆனால், அதே அமைச்சர் ஐந்தாறு நாட்களுக்குள்ளாகவே தனது கூற்றை மாற்றி விட்டார். ஆரியவட்டாரத்தின் உருட்டு மிரட்டல்களுக்கும் பழைய பத்தாம் பசலிகளின் வாய்வீரத்துக்கும் அஞ்சித் தனது திட்டத்தையே மாற்றிக் கொண்டார் அவிநாசியார் என்பதை எண்ணும்போது, அவரது வீரத்தையும், உறுதியையும், பாராட்டாமலிருக்க முடியவில்லை! அவர் என்ன மட்டரகமான மந்திரியா நினைத்தபடியெல்லாம் பேச -- ஆழ்ந்த கடவுள் பற்றுடையவர், இராமகாந்தப் படித்தவர், குறளிலே காமத்துப்பால் தவிர்த்துக் கரைகண்டவர், இவைமட்டுமா இராமகிருஷ்ணரின் சீடர், விவேகானந்தரின் வழியிலே வந்தவர் எனவேதான், நினைத்தபடி யெல்லாம் பேசாமல்- பிறர் நினைக்கிறபடி தான் பேசி வருகிறார், ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே -- என்ற பாட்டையும் பொருளையும் நன்குணர்ந்துள்ள காரணத்தால். அமைச்சரின்—உறுதியே உறுதி!!

1938ல் - ஆச்சாரியார் கைக்கொண்ட அதே திருத்தொண்டைத்தான் இன்று 1948ல் அவிநாசியாரும் கைக்கொண்டுள்ளார். அவர் அதைப் பெருமையென்றெண்ணி இந்தியைக் கட்டாயமென்றே கூறினார். இவர் அதைத் தந்திரம் என்று கருதி முதலிலே இரண்டாவது மொழி ஒன்றைப் பயில்வதே கட்டாயமில்லை என்றும், பின்னர், இரண்டாவது மொழிக் குழுவிலே ஒன்றைப் பயில்வது தான் கட்டாயமே தவிர இந்துஸ்தானி கட்டாயமல்ல வென்றும் கூறுகிறார். அவர், தான் பார்ப்பனர்- எனவே தந்திரத்தைக் கையாண்டால் பார்ப்பன சூழ்ச்சி என்று தூற்றுவார்களே மக்கள் என்று பயந்து கட்டாயமென்றார். இவர், தான் தமிழர் எனவே கட்டாயமென்றால், தமிழனே தமிழருக்குத் துரோகமிழைப்பதா என்று ஆத்திரங் கொள்ளுவார்கள் மக்கள் என்ற பயத்தால் கட்டாய இந்துஸ்தானி என்ற பெயரின்றிக் கட்டாயப்படுத்தியுள்ளார். அதைத் தவிர்த்து இருவர் நோக்கிலும் போக்கிலும் வேறுபாடுமில்லை, அதன் விளைவிலும் வேறுபாடிருக்கப் போவதில்லை. இவை உண்மையானால் அதன் "முடிவு" மட்டும் எப்படி வேறாக முடியும்?

ஆங்கில மன்றி இரண்டாவது மொழி என்ற பெயரால் மற்றொரு மொழி பயில வேண்டுவது அவசியந்தானா? என்று எண்ணிப்பாருங்கள். இப்பொழுதுள்ள மிச்ச இந்தியாவிற்கு ஒரு பொது மொழி அவசியம்; அப்பொது மொழியும் வடநாட்டு மொழியாக இருப்பது அவசியம், அதுவும் இந்தி

யாகவோ, இந்துஸ்தானியாகவோ இருப்பது மிகமிக அவசியம், வடநாட்டார் ஆதிக்கம் புரோகிதரின் வயிறு போல எப்போதும் குன்றாமல் குறையாமல் இருக்க வேண்டுமானால் என்ற கருத்தைத் தவிர்த்து வேறு எதற்காக இரண்டாவது மொழி ஒன்று வற்புறுத்தப் படுகின்றது என்பதுதான் தெரியவில்லை.

உண்மையிலேயே, இந்தியாவிற்கு ஒரு பொது மொழி அவசியந்தானா? இந்தியாவின் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் ஒரு மொழியைக் கொண்டு ஆளுவது எளிதாகுமா? ஒரு மொழியைப் பொது மொழியாக்கினால் அதன் விளைவாகப் பிறமொழிகளின் முன்னேற்றம் தடைப்படாதா? தடைப்படுமானால் அந்தந்த மண்டல மொழியினரும் பொது மொழியை எதிர்க்கவும், பொதுமொழியின் ஆதிக்கத்தினின்றும் விலகிக் கொள்ளவும் முற்படமாட்டார்களா? அடிப்படை வாழ்க்கை முறையிலேயே வேறுபட்டு நிற்கும் தென்னாட்டவர்களும் வடநாட்டு மொழியைத்தான் பொதுமொழியாகக் கொள்ள வேண்டுமா? தென்னாட்டிற்கென ஒரு பொது மொழியும் வடநாட்டிற்கென ஒரு பொது மொழியும் கொள்ளுகின்ற அளவிற்கேனும் ஏன் தென்னாட்டவருக்கும் உரிமை அளித்தலாகாது? இந்தியாவே இரண்டாட்சிகளாகப் பிரிய இடமிருந்தபோது மிச்ச இந்தியாவிற்குள் இரண்டு பொது மொழிகள் வழங்குவதற்குக் கூட வழியில்லாமற் போய்விட்டதா? இதைவிட மிக மிகச் சிறிய நாடான ஸ்விட்சர்லாந்தில் - ஜெர்மனி - பிரஞ்சு - இத்தாலி ஆகிய மூன்று மொழிகளுந்தானே ஆளும் மொழிகளாகியுள்ளன? இவ்வளவு பெரிய நாட்டில் ஏன் தமிழும் இந்தியும், தெலுங்கும் இந்துஸ்தானியும் என்று ஏதேனும் இரண்டு மொழிகள் பொது மொழிகளாகக் கூடாது? அதிலே பிறமொழிக்காரர்கள் ஒவ்வொருவரும் தம் தம் மொழியைப் பொதுமொழியாக்கப் போராடுவார்கள் என்றால் இப்பொழுது மட்டும் இந்தப் பொது மொழிக்குத் தலைவணங்குவார்கள் என்றோ, எப்பொழுதும் எதிர்க்க மாட்டார்கள் என்றோ எப்படிக் கூற முடியும்? மற்ற மொழிகளைப் பேசுபவர்களைவிட இந்தியைப் பேசுபவர்கள் எண்ணிக்கை அதிகம் என்பதற்காக இந்தியை அந்நிய மொழியாகக் கொண்டுள்ள பெரும்பான்மையோரைச் சிறுபான்மையினரின் மொழியைப் பயிலச் செய்வது எப்படி நீதியாகும்? இந்த அநீதியை இன்னும் எவ்வளவு காலத்துக்கு மக்கள் விட்டு வைப்பார்கள் என்று இவர்கள் கனவு காண்கின்றனா?

இவ்வளவையும் சிந்திக்காமலே கூட, சிந்தித்திருந்தால் இவைகளை இலட்சியம் செய்யாமலேயே, இந்துஸ்தானியைப் பொதுமொழி என்ற பெயரால் ஆதிக்க வாயிலிலே நுழைக்கிறார்கள் ஆளவந்தார்கள். தமிழ்நாட்டைப்பொருத்த வரையிலும் அவர்கள், மன்

ளிக்க முடியாத குற்றத்தையும் மாகாணத்தைப் பொருத்த வரையில் அவர்கள் மறக்க முடியாத துரோகத்தையும் இழைத்தவர்களாகிருர்கள்.

இரண்டாவது மொழிகளுக்குள்ளே ஒன்ருன 'இந்துஸ்தானி'யை மட்டும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பயிற்றுவித்தாகவேண்டும். வடமொழிக்கும் ஒரு ஆசிரியர் இருப்பார் பழைய வழக்கப்படி. உருதுவிற்கும் தெலுங்கிற்கும் சிற்சில பள்ளிகளில் மட்டும் ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம் ஆனல் மாணவர்கள் இரண்டாவது மொழியொன்றைப் பயின்ருக வேண்டிய அவசியமும், ஒவ்வொரு பள்ளியிலும், இந்துஸ்தானி மட்டுமே நிச்சயமாகப் பயிற்றுவிக்கப்படும் நிலையும் உள்ளதால், பெரும்பாலான மாணவர்கள் இந்துஸ்தானி பயிலவேண்டிய கட்டாயத்திற்காளாகிருர்கள் தமிழகத்தில் ஏன் இந்த நிலைமை? இந்துஸ்தானி பயில்வதால் ஏற்பட இருக்கும் பயன் தானென்ன?

இந்துஸ்தானியைப் படித்தவர்கட்கே மத்திய அரசாங்க அலுவல்கள் அளிக்கப் படப்போவதால் பெரும்பாலான மாணவர்களும் இந்துஸ்தானியைத்தாமே விரும்பிக் கற்பார்கள் என்றும் கூறியுள்ளார் கல்விஅமைச்சர். உத்தியோகத்திற்காகக் கற்பது விரும்பிக் கற்பதாகாது என்பது மட்டுமன்றி, அது கல்வியின் சிறப்பையே மறந்ததாகும். அதிலேயும் கல்வி— அறிவு வளர்ச்சிக்காக—அறிவு ஒழுக்க நலனுக்காக — ஒழுக்கம், உயர்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக; எனவே கல்வி, கல்விக்காகவேயன்றி, கேவலம் உத்தியோகத்திற்காகவல்ல என்று ஊரறிய உரத்த குரலிலே உபதேசித்தவர்களே தாங்கள் சில காலம் பதவியிலேயே இருந்து அந்தப்போதை ஏறியவுடன் பிறருக்கும் உத்தியோக ஆசையையூட்டி, இந்துஸ்தானி படிக்கக்கூறுவது வெட்கப்பட வேண்டியதாகும்.

அப்படியே உத்தியோகத்தை விரும்பிக் கற்க முன்வருகின்றவர்களில் எத்தனை பேருக்கு— மத்திய சர்க்கார் உத்தியோக மளிக்க முடியும்? இன்றே படித்தவர்களில் பலருக்கு வேலையில்லாத நிலை யெனில்— இனிப் படித்து வெளிவர இருக்கும் வாலிபர்களில் எவ்வளவு பேருக்கு மத்திய சர்க்காரில் வேலை கிடைக்கும்?

படித்தவர்களில் நூற்றுக்கு ஒருவருக்குக் கிடைக்கும் வேலைக்காக—மற்றுமுள்ள 99 இளம்பிள்ளைகளும் இந்துஸ்தானி என்ற பாராங்கல்லைச் சுமந்தாக வேண்டுமா? அன்றி இந்துஸ்தானி கற்ருல்தான் அறிஞர்களாக உலவமுடியும், எந்த வேலையையும் பார்க்க முடியும் என்ருவது கூற முடியுமா? இன்றைய மாகாண அமைச்சர்களெல்லாம் இந்துஸ்தானி கற்றதால்தான் தம் பணியை நிறைவேற்றி வருகின்ருர்களா?

தற்குறிகள் நிறைந்த தமிழகத்தில் கையொப்பமிட

தெரிந்தவர்கள் என்ற நிலையில் உள்ள 100க்கு 12-பேர்களி லும், பலர் அவிநாசிலிங்கம் என்பதை அருவசியலிங்கம் என்றும், ஆச்சாரியார் என் பதை ஆசாரியார் என்றும் எழுத்து கூட்டும் அளவிற்கே தாய்மொழி யறிவு பெற்றுள்ள நிலையில்—ஆரம்பக் கல்வியை—நாடுமுழுதும் கட்டாயப்படுத்த வழியற்ற ஆளவந்தார் இந் துஸ்தானியை இங்கே புகுத்தி-—அதன் பெயரால் பெரும் பொருட் செலவை ஏற்கத் துணிந்திருப்பது வருந் தச் செய்கின்றது.

தமிழோ-இனி பெயரளவில் முதல் மொழி எனினும் உயர் நிலைப்பள்ளி வகுப்புகளில் முன்பு பெற்றிருந்த பாட மணி களையும் இழந்து விட்டது. முதல் மொழியாயிருந்த ஆங்கி லம் 8 அல்லது 9 பாட மணிகள் பெற்றிருந்த போதிலும், இரண்டாவது மொழியாக இருந்தவரை 6-பாடமணிகள் பெற்றிருந்த தமிழ் — முதல் மொழியானவுடன் 4 பாடமணிகளைத் தான் பெற்றி ருக்கின்றது.

தமிழாசிரியர்களாக உள்ள வர்களிற் பெரும்பாலோர், இளைஞர்களாகவும் சீர்திருத்த வாதிகளாகவும், முற்போக்கா ளர்களாகவும், ஒற்றுமையுடை யோராகவும் உள்ளதைக் கண் டதனால்தான், ஏன் இவ்வளவு பேர் தமிழாசிரியராக இருக்க வேண்டும் என்றெண்ணி இப்படிப்பட்ட பலருக்கு நாளa டைவில் வேலையில்லாமற்போ கக்கூடிய இத்திட்டம் மலர்ந் ததோ என்று கூடத் தோன்று கிறது. ஆனாலும், ஆசிரியர் கள் அமைச்சருக்கு நன்றி செலுத்த வேண்டும், வேலை யில்லாமற் போகக்கூடிய நேரத்தில், உற்ற இடத்தில் உதவியாக, இந்துஸ்தானி எதிர்ப்புப் பணியை அவர் களுக்கு அளித்திருப்பதற்காக.

இந்நிலையில், இந்துஸ்தானி யைப் புகுத்தியதும், அதற் கென்று பொழுதும் பொருளும் செலவிடுவதும் — தாய் தஞ் சையிலே கிண்ணிப்பிச்சை எடுக்க, தனயன் குடந்தையிலே கோதானம் செய்தானும் என்ற பழமொழியைத் தான் நினை வூட்டுகின்றது.

உண்மையில்—மத்திய சர்க் கார் ஊகமுள்ளதாக இருந் தால் கூட-மாகாண சர்க்கா ரின் இச்செயலைத் தடுத்தி ருக்க வேண்டும். ஆனால் அள வுக்கு மிஞ்சிய அதிகார போதையில் ஆழ்ந்துள்ள சர்க் காருக்கு ஊகம் எப்படித் தோன்றும்? ஆதிக்கம் நிலைக்க இந்துஸ்தானி பரவத்தானே வேண்டும், எனவே புகுத்தட் டும், அதுவே இலாபமானது என்று கருதியிருக்கக்கூடும். ஆனால் - அவ் வாசையிலே மண் விழவே, அச்செயல் காரண மாகும் என்பதை, அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். பழம் பெரும் சாம்ராஜ்யமான, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே, பிறநாடுகள் மீதுள்ள தனது பிடியைத் தளர்த்திக் கொள் வதுமூலமாகத் தன் நிலையைச் சரிப்படுத்திக்கொள்ள முய லும் நாட்களில் - இந்தப் புது

வடநாட்டு ஆதிபத்தியம் தென்னாட்டின் மீதுள்ள பிடிப்பைத் தனது மொழிகொண்டு வலுப்படுத்திக் கொள்ள முயலுவது அறிவுடைமையாகாது. அவர்கள் விருப்பத்தைப்போல் முகவில் தளை – இறுகலாம். எனினும், அத்தளை அறுபடவே இறுகுவதும் துணையாகும். ஒருவேளை தென்னாட்டார் எழுச்சியுற்று, உரிமைப் போர் தொடுத்து வடநாட்டார் தொடர்பைஅறுத்துக்கொள்ள ஒரு வாய்ப்பாகட்டும் என்ற எண்ணத்தோடுதான், அவினாசியார் இத்திருத்தொண்டைக் கைக்கொண்டிருப்பாரோ என்று கூடத் தோன்றுகிறது

என்றாலும், ஆழந் தெரியாமல் காலைவிட்ட பெருமை கல்வி அமைச்சருக்கே உரியதாகும். இன்றுள்ள நிலைமையில் இந்துஸ்தானியைப் புகுத்துவது மறத்தமிழர்களின் வீரத்தைச் சோதிப்பதும் போருக்கழைப்பதுமேயாகும்.

ஆச்சாரியார் பெற்ற அநுபவம் — அவினாசியாருக்கு எப்படிப் புரியும்? அவருடைய ஆட்சி நடந்தபோது இவர் அமைச்சராகவா இருந்தார்? அமைச்சராவோம் ஒருநாள் என்று கருதிக்கூட இருக்கமாட்டாரே? அன்றைய நாட்டு நிலைமையை, மக்கள் மனக்கொதிப்பை எப்படி அறிந்துகொண்டிருக்க முடியும்?

அன்றைய நிலையில் துஞ்சும் புலியை இடறிய குருடரானார் ஆச்சாரியார். தமிழ் உணர்ச்சி வீறிட்டெழுந்து, இந்தியினை வீழ்த்தத் தமிழர் பெரும்படை புறப்பட்ட காட்சி-விழித்துக் கொண்டபுலி பாய எழுந்தது போன்றிருந்தது. இன்றைய நிலையில் வயப் புலியின் வாலுருவி விட்ட நிலைக்காளாகியுள்ளார் அவினாசியார். தமிழர்கள் இன்று உறங்கிக் கிடக்கவில்லை, தட்டி எழுப்ப ஆள் தேவையில்லாத நிலையினர். அன்று ஆச்சாரியார் காலத்திலே இருந்த தமிழகமல்ல இன்றிருப்பது. அன்று துஞ்சிய புலி, இன்று கண்விழித்துச் செவி நிமிர்த்தி, வால் சுழற்றிய வண்ணமுள்ளது. இந்நிலையில் அதன் வாலுருவி விடுவது பேதமையேயன்றோ?

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் தோன்றாத காலத்திலேயே, இந்தியை நுழைத்ததன் விளைவை எண்ணிப் பார்த்திருப்பின், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று வளர்ந்து, நாட்டு மக்களிடத்திலே செல்வாக்கும் பெற்றுள்ள இச்சமயத்தில், இந்துஸ்தானியை—எந்த அளவிலும், தமிழகத்தில் புகுத்தத் துணிந்திருக்க முடியாது. என்றாலும்—நுழைத்து விட்டார் தனக்குள்ள அதிகாரத்தின் காரணமாக. தமிழர்களோ, அவ்வதிகாரமென்ன சாசுவதமா? தமிழர்களென்ன தொழும்பர்களா? என்று கேட்கத் தொடங்கிவிட்டனர்.

தமிழர்களின் தனிப்பெருந் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களும் போர் முரசம் முழங்கி விட்டார். தளபதி

அண்ணாத்துரையும்— படை தயாரென கூறிவிட்டார். தமிழ்ப் பேரறிஞர்களும் பெருந் தலைவர்களுமான, மறை மலையடிகள் பசுமலை பாரதியார், திரு. வி. க. ஆகிய மூவரும் இந்த எதிர்ப்புப் போர் முகாமிற்குப் புறப்பட்டுவிட்டனர். 17-7-48லே— சென்னையிலே இந்தி எதிர்ப்பாளர் மாநாடு. அதிலே தென்மண்டலத்திலிருந்து பாண்டியனாரும், மத்திய மண்டலத்திலிருந்து கி. ஆ. பெ. விசுவாதமும், வட மண்டலத்திலிருந்து ம. பொ. சிவஞானமும்—மற்றும் பலரும் கலந்துகொள்ள இருக்கின்றார்கள்.

இந்தி எதிர்ப்பு இன்று ஒரு கட்சியின் தனிப்பட்ட பணியாக இல்லாமல்—பலகட்சித் தோழர்களின் ஆதரவையும் பெற்றுவிட்டது. இடைவிட்டு நிற்க நேர்ந்தவர்களும் நெருங்குகின்றனர். எதிர்முகாமிலே இருந்தவர்களும் வந்து சேருகின்றனர். தலைவர்கள் உள்ளந் திறந்து பேசி உற்சாக மூட்டுகின்றனர்.

புதுப்புது வீரர்கள் படை வரிசையிலே வந்து கூடுகின்றனர். தமிழ் நாடெங்கும், பட்டி தொட்டிகளிலெல்லாம் கூட இந்திஎதிர்ப்புப்படை 'வீடுகள் அமைக்கப்படுகின்றன. வீரர்கள் அணிவகுக்கின்றனர்.

"இந்திஎதிர்த்திடவாரீர்-நம்; இன்பத் தமிழ்தனைக் காத்திடவாரீர்' என்ற அழைப்பைத் தமிழகத்தை நோக்கி வழங்கி விட்டார் புரட்சிக் கவிஞர். தாய்மார்களும், சிறுர்களும், வாலிபர்களும், கிழவர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், கருஞ்சட்டையினரும், கதர்சட்டையினரும், தம் தமக்குக் கிடைத்த அழைப்பென்று கருதிப் புறப்பட்ட வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் இந்துஸ்தானியைத் தமிழ் நாட்டைவிட்டே அறவே விலக்கினால் ஒழிய, சென்னை மாகாணத்தின் (திராவிட நாட்டின்) பிறமொழி மண்டலங்களிலும்விருப்பப்பாடமாமட்டுமே அமைத்தாலொழிய இப்போரைத் தடுக்க முடியாது என்பதை ஆளவந்தார்கள் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்று எச்சரிக்கிறோம் கடமை என்ற காரணத்தால். எச்சரிப்பதை ஏற்க மறந்தால் ஆப்பைப் பிடுங்கிய குரங்கு கதையாகிவிடுமோ— இன்றைய இராமபக்தரின் நிலை என அஞ்சுகிறோம். எனவே வெள்ளம் வருமுன் அணைகட்டுவதுபோல, இந்தி எதிர்ப்புப் பட்டாளம் போர்க்களம் புகுமுன், தம் தவறைத் திருத்திக் கொள்ளட்டும் ஆளவந்தார், இல்லையானால் விளைவு எதுவாயினும் ஆகட்டும். புறமுதுகிட்டறியாத தமிழன் தமிழைக் காப்பாற்றத் தொடங்கும் போரில்வாகைசூடிடத் தவறப்போவதில்லை; தவறினால் தாளமுத்து நடராசன்களாக நிலைக்கத்தான் போகிறார்கள். முடிவு எதுவானாலும் தமிழர் தம் கடமையைச் செய்தே தீருவர். எனவேதான் ஆளவந்தார் போர்க்களம் புகுமுன், சிந்திக்கட்டும் என்று கூறுகிறோம்.

குளிர் செந்தீ

நந்தமிழுக்கு விளைந்த குறைகள் பலப்பல. அவை யாவற்றாலும் ஊனம் பெறாது தனது உண்மையியல்பின் செம்மையினால் பழையவற்றுள் பழையதாயும் புதியவற்றுள் புதியதாயும் மூவாது சாவாது என்றும் உயிர்வாழும் தண்டமிழ் அன்னை இன்னும் உயிரோடு வாழ்ந்து வீற்றிருப்பதைக் கண்டு பொறாமை கொண்ட பகைச்சொல்லினர் ஆரியம் முதலிய மொழிபோற் றமிழ் மொழியையும் இறந்தமொழியாக்குங் கருத்துடன் அவள் மக்களின் அறியாமையைக் கருவியாகக்கொண்டு, அவள் இன்னுயிரைச் செகுத்து விடலாமென்று துணிந்து கொண்டு இற்றைக் காலத்தில் முன்வந்திருக்கின்றனர். ஹிந்தி என்னும் குளிர் செந்தீயை அவள் இனிய உடம்பில் சிறிது சிறிதாக நுழைத்து விடலாமென்று கருதுகின்றார்கள். ஹிந்தி வளர இடம்பெறுமாயின், இன்னுஞ் சில ஆண்டுகளில் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் தமிழ் மணம் அறவே யொழிந்து பள்ளிப்புத்தகம், பத்திரிகை யுலகம், சினிமாக் காதை, சிறந்த நூல்கள், செவ்விய பாடல், அரசியல் நிகழ்ச்சி, ஆலயப் பூசனை, அகத்திற் பேசும் உறவினர் மொழி ஆயவெல்லாம் ஹிந்திமயமாய்த் தமிழர் நாடும் ஹிந்தி நாடாகவே இந்தியநாடும் நடுவெழுத்தாய உயிரினை இழக்கும். உலக சரித்திரம் ஊனம் எய்தும். தமிழர் நாகரிகமே இந்திய நாகரிக உயிரெனும் நுட்பம் ஒழிந்திடலாகும். தமிழர்க்கு இகழ்ச்சியும் கேடும் இதனின் வேறேது ?.

இப்பேரிடையூற்றை நீக்குதற்குத் தமிழ் மக்கள் கண் விழித்துக் கடமையாற்றுஞ் சமயமிதுவே. கடமையை நிறைவேற்றுதற்கு உண்மைத் தமிழர் உடல் பொருள் ஆவி மூன்றும் அர்ப்பணம் செய்தற்குப் பிற்படலாகாது. மிகுதியால் மிக்கவை செய்வாரைத்தகுதியால் தாக்கித் தலைகுனியச் செய்யாவிடில் தமிழர் என்னும் பெயர்க்குத் தமிழ் நாட்டினர் தகுதியிலர் என்பதே முடியும்.

மறைந்த பல்கலைப்புலவர், பேராசிரியர்,
கா. சுப்பிரமணியப் பிள்ளை M. A., M. L., அவர்கள்,
26-12-37ல் திருச்சியில் நடைபெற்ற
தமிழர் மாநாட்டுத் திறப்பு விழாவில் கூறியது

★ நீதிக் கொலை

உடையார்பாளையம், ஆசிரியர் வேலாயுதம் அவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்த வழக்கைத் திருச்சி ஜில்லா மாஜிட்ஸ்ரேட் வாபீஸ் பெற்றது தமிழ்நாடு முழுதும் ஒரு பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

ஆசிரியர் கொலை செய்யப்பட்டது கடந்த (13-11-47) நவம்பர் மாதத்தில். வழக்கை எடுத்துக் கொண்டதோ ஆறு மாதங்கட்குப்பின். இடையிலே வழக்கு நடைபெறும் என்று எதிர்பார்த்த மக்கள் வழக்கு நடைபெறாததால் ஏமாற்றமடைந்து அரசாங்கத்தாருக்கு அறிவித்து, அரசாங்கத்தார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்ட பின்னரே வழக்கு தொடரப்பட்டது. குற்றத்தை நிரூபிக்கவோ 60 சாட்சிகளுக்கு மேல் கிடைத்திருந்தனர்.

குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்களிலே ஒருவர் (பார்ப்பனர்) நஞ்சுண்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். மற்றவர்களிலே ஒருவரான வெங்கிடாசலம் பிள்ளை என்ற காங்கிரஸ் எம். எல். ஏ.யும், அவரது சகோதரன் நடராசம் பிள்ளையும் அதுவரையிலே தலைமறைவாய் இருந்து, இறுதியாக ஜெயங்கொண்டான் சப்மாஜிஸ்ட்ரேட் முன் வந்து ஆஜராகி ஐந்தே நாட்களில், மற்றும் ஒரு குற்றவாளி (சண்முகசுந்தர முதலியார்) தலைமறைவாக இருக்கும்போதே வழக்கி வாபசாகி விட்டது.

குற்றவாளிகள் போலிசாரால் காவலில் வைக்கப்பட்டிருந்தபோதே கொலைக் குற்றவாளிகளைப் போலன்றி, அரசியல் A-வகுப்புக் கைதிகளைப் போலவே உரிமையோடு நடத்தப்பட்டனர் என்ற செய்தியும் அரசாங்கத்தின் முயற்சிக்குப் பின்னால் எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டதும் பரபரப்பை உண்டாக்கியதில் ஆச்சரியமில்லை.

ஒரு ஜில்லா கலெக்டருக்கு அதிகாரமிருக்கிறது என்பதற்காக, இலஞ்சம் கொடுக்கக் கூடிய அளவிற்கு வசதியுள்ளவர்களும், ஆசைகாட்டக்கூடிய அளவு செல்வாக்குடையவர்களும் சிக்கியுள்ள ஒரு கொலை வழக்கை வாபஸ் பெறுவது எப்படி நியாயமாகும்?

ஒரு கொலை நடந்தும் அதற்குக் காரணமானவர்கள் கண்டுபிடிக்கப் படவில்லை என்றாலே அது போலிசாரின் கையாலாகாத தன்மை என்பது மட்டுமன்றி அரசாங்கத்தின் குற்றமுமாகும். அதிலும் கண்கண்ட உண்மைகளை மறைத்து மழுப்ப முயலுவதோ, கிடைத்த குற்றவாளிகளை அதிகாரத்தால் விடுவித்துவிடுவதோ - மன்னிக்கக்கூடாத குற்றமாகும். "நீதி மன்றமே ஒரு இருட்டறை, அதில் வக்கீ

லின் வாதமே கைவிளக்கு, அங்கே பணமிருந்தவர்களால் தன் ஒளியிருந்த கைவிளக்கைப் பெறமுடியும்' என்று அறிஞர் அண்ணா கூறும் நிலைமை உண்மையாயினும், விசாரணை முடிவு எதுவாயினும், விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மைகளை ஓரளவேனும் பொதுமக்கள் அறிந்து முடியும். அதற்குமாறாக வழக்கைத் தள்ளியது, பொது மக்கள் விருப்பத்திற்கு மாறான, நம்பிக்கையை இழக்கச் செய்யும் செயலாகும்.

இந்தச் செயலுக்குக் காரணமான திருச்சி ஜில்லா கலெக்டர்— மாற்றப்பட்டுவிட்டார், என்பதனால் மட்டும் நிலைமை மாறிவிடவில்லை. அவரது செயல் உண்மையிலேயே நீதிக்கு மாறுபட்டதாக இருக்குமானால்— அவரை வேறு வேலையில் விட்டுவைப்பதும் பொதுமக்கட்குத் துரோகஞ் செய்வதேயாகும். அரசாங்கம் இவ்வழக்கைக் குறித்துப் பரிசீலனை செய்து வருவதாகச் சில நாட்களுக்கு முன் அறிவிக்கப்பட்டது. எனவே—முதலமைச்சர் ஓமந்தூரார் இதைக் குறித்து முழு கவனம் செலுத்தி நீதியை நிலைநாட்ட வேண்டுவது அவசியமாகும். குற்றவாளிகள் கூண்டிலே நிறுத்தப்பட்டு மீண்டும் வழக்கைத் தொடங்கி விசாரித்து நியாயம் வழங்கச் செய்யவேண்டும். இல்லையேல் —நீதி நிலைப்பதரிது

மற்றும், செல்வந்தர், செல்வாக்குடையோர், சட்டசபையினர் ஆகிய எவரும் நீதி நிர்வாகத்திலே தலையிடுவதையும், அடியோடு தடுத்தாகவேண்டும். சில நாட்களுக்கு முன் பிரதமர் இராமசாமியே கூறியதுபோல—காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் நிர்வாகத்தில் தலையிட்டு நீதியைக் குலைத்து வருவது உண்மையானால், ஏன் அவர்கள் நீதியிலேயும் குறுக்கிட மாட்டார்கள் என்றும், இந்த வழக்கைப் பொருத்த வரையிலும் அவர்கள் தலையிட்டிருக்க மாட்டார்கள் என்று எப்படிக் கருதமுடியும் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே— நீதி நிலைநாட்டப்பட இவ்வழக்கை வாபஸ் பெற்ற காரணத்தையும் கண்டறியவேண்டும்.

மற்றும் கொலை செய்யப்படுவதும், கொலை செய்தவர்கள் அல்லது அவ்வாறு கருதப்படுபவர்கள் விடுவிக்கப்படுவதும் —தனி மனிதனின் உயிருக்குள்ள பாதுகாப்பையே நீக்கியதாகும். எந்த மனிதனும் கொலை செய்யப்படாமல் பாதுகாக்கப்படவே— சட்டமும் மன்றமும் அரசாங்கமுமாகும். எனினும் இவ்வழக்கில் நீதி வழங்கப்படவில்லை என்பது மட்டுமன்றி— நீதியே கொலை செய்யப்பட்டு விட்டதுபோல் தோன்றுகிறது.

நீதி இறந்தால் நாடு வாழாது எனவே அரசாங்கம் நீதியை அழியவிடக்கூடாது என்பதோடு. இவ்வழக்கில் நடந்துள்ள நீதிக்கொலையையும் நீக்கி நியாயம் வழங்க வேண்டும் இல்லையெனில் —பொது மக்களின் பழி தூற்றுதலுக்கு ஆளாக நேரிடும் என்பதை ஆளவந்தார் மறக்க வேண்டாம்.

வாபஸ் பெறுக

கடந்த அக்டோபர் 6-ம் நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் விடுதியில், காங்கிரஸ்கட்சி மாணவர்கள் பலராகக் கூடிக்கொண்டு திராவிடக் கழகக் கொடியை இறக்க முயற்சித்தபோது, அதைத் தடுத்த கழக மாணவர்களோடு கைகலப்பு ஏற்பட்டதன் விளைவாகப் பல திராவிட மாணவர்கள் காயப்படுத்தப்பட்டனர். அவர்களிலே பலர் மருத்துவ விடுதியிலும், சேர்க்கப் பட்டனர்.

அந்தக் கலவரம் ஏற்பட்டது காரணமாகப் போலீசார் காங்கிரஸ் மாணவர்கள் 13-பேர் மீதும், திராவிடக் கழக மாணவர்கள் 5 பேரும் கழக மாணவர்களின் உறவினர்கள் 2 பேருமாக 7 பேர் மீதும், சிதம்பரம் சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இருவழக்குகள் (Counter Cases) தொடுத்து நடத்தி வந்தனர். பிப்ரவரி 28-ம் நாளன்று மீண்டும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்போது, சர்க்கார் வக்கீல் காங்கிரஸ் மாணவர்கள் 13 பேர் மீதுள்ள வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்ததனால்—காங்கிரஸ் மாணவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

ஒரே கலவரத்தில் சம்பந்தப் பட்ட காங்கிரஸ் மாணவர்களை—எவ்வளவு பெரிய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருந்த போதிலும் விடுவிப்பதும், அதைவிடக் குறைந்த அளவு குற்றத்திற்கே ஆளாகியிருந்த எதிர்க்கட்சி மாணவர்கள் மீது வழக்கைத் தொடர்ந்து நடத்துவதும் சுயராஜ்ய சர்க்காரின் "நீதி" போலும். மாணவர்கள் என்பதற்காக — மன்னித்து விட்டு வாபஸ் வாங்குவதென்றாலும் இரண்டு வழக்குகளையும் வாபஸ் பெற்றிருக்க வேண்டும். அதற்கு மாறாக காங்கிரஸ் மாணவர்களைப் பெருங்குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியிருந்த போதிலும் விடுவித்த செய்கையானது—காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு காலித்தனத்தில் இறங்கினாலும், இந்த சர்க்கார் அவர்களுக்குத் துணை போகும் என்பதை மட்டுமன்றி, அவசியமானால் சர்க்காரே காங்கிரஸ்காரர்களைத் தூண்டிவிட்டு, அதனால் அடிபட்டவர்கள் மீதும் உதைபட்டவர்கள் மீதும் வழக்குத் தொடர்ந்து தண்டிக்க முற்படும் என்றும் கருதச் செய்வதாகும்.

காங்கிரஸ் மாணவர்கள் கல்வி மந்திரியைக் கண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள், எனவேதான் விடுவிக்கப்பட்டனர் என்று சொல்லிவிடக்கூடுமே என்று கருதிய திராவிட மாணவர் கழகத் தலைவர் திரு. K. A. மதியழகன் அவர்களும், ஒரு பெருந்தன்மை வாய்ந்த காங்கிரஸ்காரரின் உதவி கொண்டு அவருடன் சென்று

கல்வியமைச்சரைக் கண்டு, நிலைமையை விளக்கிக் கூறி வழக்கிலே சம்பந்தப்பட்ட பிறமாணவர்கள் சார்பாகவும் (தேவையில்லையாயினும்) மன்னித்து விடுதலை செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். உடன் இருந்த காங்கிரஸ் பிரமுகரும் விடுவிக்கப்பட வேண்டியதன் நியாயத்தையும் அவசியத்தையும் கூறினர். என்றாலும் அமைச்சர் அவினாசியார் இன்று வரையில் இதைக் குறித்து எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட K.A. மதியழகன் அவர்களைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், B. A. தேர்வு எழுதுவதினின்றும் தடுத்துவிட்டார். கலவரத்திற்குக் காரணமான மற்றக்கட்சி மாணவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாகக் கூறிய துணைவேந்தர், அவர்கள் காங்கிரஸ் மாணவர் என்ற காரணத்தால் போலும் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளத் துணியவில்லை.

மேலும், கோர்ட்டிலே வழக்கு நடந்து கொண்டுள்ள போது—அதன் முடிவு தெரியுமுன் அதில் சம்பந்தப்பட்ட ஒரு மாணவரை மட்டும் குற்றமுள்ளவராகக் கருதி—அவரது உரிமையைப் பறிப்பது அநீதி என்பது மட்டுமன்றி—கோர்ட்டிலும் நீதி கிடைக்காமற் போகக் காரணமாகலாம். எனவே இதனைக் கருதியேனும் பல்கலைக் கழகத்தார் அம்மாணவருக்கு விதித்துள்ள தடையை உடனே நீக்க வேண்டுகிறோம்.

அரசாங்கத்தாரும், ஒரு பல்கலைக்கழக மாணவர்களுக்குள், கட்சிப் பிளவும், பிணக்கும் வெறுப்பும் நீடிக்கும்படியான விதத்தில், கட்சிக்கொரு நீதி காட்டுவது முறையல்ல என்பதை உணர்ந்து, காங்கிரஸ் மாணவர்கள் மீதுள்ள வழக்கை வாபஸ் பெற்றதைப் போலவே—திராவிடக் கட்சி மாணவர்கள் மீதுள்ள வழக்கையும் வாபஸ் பெற்று-மாணவர்களிடையே நல்லெண்ணம் நிலவ வழிசெய்ய வேண்டுகிறோம்.

இல்லையானால், "காங்கிரஸ் மாணவர்களின், வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டதிலே, அமைச்சரிலே எவருக்கேனும் கனத்த லாபம் இல்லாமலா இருக்கும்" என்று சிலர் பேசிக் கொள்வதை உண்மையென்று பொதுமக்கள் நம்பவும், "ஓமாந்தூரார் மந்திரிசபை மட்டுமென்ன வாழ்கிறதோ, அதிலேயும் அவினாசிலிங்கங்கள் இருக்கத் தானே செய்கிறார்கள்" என்று தூற்றவும் இடமாகும். எனவே அரசாங்கத்தாரின் இத்தகைய நடவடிக்கைகளைக் குறித்த வழக்கு மக்கள் மன்றத்திற்கு வருமுன்—இவ்வழக்கை வாபஸ் பெறுவது அரசாங்கத்தாரின் கடமை மட்டுமல்ல, அறிவுடைமையுமாகுமென அறிவித்துக் கொள்கிறோம்.

வள்ளுவன் மகள்

[இரா - குழூஉத்தலைவன்]

★

1. கன்னல் நறுஞ்சுவையே!— தேனே!
   கட்டிக் கனியமுதே!
   உன்னை மறந்து நின்றார் - தமிழர்,
   உணர்ச்சி இல்லையம்மா!

2. வள்ளுவன் மாமகளே! — மூவேந்தர்
   மடி வளர்ந்தவளே!
   தெள்ளத் தெளித்தெடுத்த — முக்கனியின்
   தீஞ்சுவைச் சாறே!

3. உள்ள உள்ளச் சுரக்கும் — கற்பனை
   ஊற்று நறுநீரே!
   அள்ள அள்ளக் குறையா — அறிவின்
   ஆன்ற மணிக்குவையே!

4. இன்பக் களஞ்சியமே! —காதலர்கள்
   ஏற்றும் மணிவிளக்கே!
   தென்னல் தவழ்நிலவில் — அன்னவர்
   தீட்டிடும் ஓவியமே!

5. அன்பின் உயிர்நிலையே! — உலகினுக்
   கறம் வளர்த்தவளே!
   உன்னை வெறுத்துநின்றார் — ஒரு சிலர்
   உரைக்கக் கூசுதம்மா!

6. வம்பு மலர்க்குழலை — மங்கையர்க்கு
   மழித் திடுவது போல்
   கம்பிதனை அறுத்தே, — வீணையைக்
   கையில் கொடுப்பதுபோல்,

7. இன்பத்துப் பால் ஒழித்து — உன்னையே
   ஏற்றிட வேண்டும் என்பார்
   அன்னை வயிற்றினின்றி — வான்வழியே
   அன்று குதித்தவரோ!

★ பாராட்டுகிறோம் ★

தமிழ்நாட்டின் தனிப் பல்கலைக் கழகமான, அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் இடைக்காலத் துணைவேந்தராகத் தமிழ்ப் பேரறிஞர் டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார் M.A. Ph.D., அவர்கள், நியமிக்கப்பட்டுள்ள செய்தி மகிழ்ச்சியளிப்பதாகும். தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகத் தமிழ்ப் பேராசிரியரான ஒரு உண்மைத் தமிழரே நியமிக்கப்பட்டது தமிழுக்களிக்கப்பட்ட பெருமையாகும்.

அறிஞர் அவர்கள் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்திலேயே மாணவராகப் பயின்றிருப்பதும், பல்லாண்டுகளாக விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், செனெட்டிலும் சிண்டிகேட்டிலும் உறுப்பினராகவும், மாணவர் விடுதித் தலைவராகவும், பிற பல்கலைக் கழகங்களில் தொடர்புடையவராவும் தொண்டாற்றியுள்ளதும் அவரது நுண்ணறிவுத் திறனும், வாதத்திறமையும், அவரை ஒரு சிறந்த நிர்வாகத் தலைவராக விளங்கச் செய்வதோடு, பல்கலைக்கழகத்தின் ஆக்கத்திற்கும் துணையாகுமெனக் கருதி மகிழ்கிறோம். அறிஞர் சிதம்பரநாதனார் அவர்கள் நிரந்தரத் துணைவேந்தராக நியமிக்கப்படும் நாளையும் தமிழகம் எதிர்பார்க்கின்றது. நாமும், இந்நியமனத்திற்குக் காரணமானவர்களைப் பாராட்டுவதோடு, அறிஞருக்கும் வாழ்த்துக் கூறுகிறோம்.

---

8. *பெண்ணின் உயர்வறியார் — காதலின்*
   பெருமையுந் தெரியார்.
   வண்ணத் தமிழ்க்குறளே !— உன்னையும்
   வதைக்க எண்ணினரோ ?

9. *சற்றும் மனங் கலங்கேல் — நூறுயிரம்*
   தமிழ் இளைஞர் உள்ளோம்
   வெற்றித் தடந்தோளும் — நீதந்த
   வீரமும் உள்ளதம்மா!

10. *என்றும் உனைப்பயில்வோம் — தமிழகம்*
    எங்கும் பரப்பிடுவோம்,
    முன்றத் தறம்வளர்க்கும் — அரசீ!
    வாழியர் ! வாழியம்மா !

வீட்டிற்கொரு புத்தகசாலை

அறிஞர் சி. என். அண்ணாத்துரை

★

அறிஞர் சி. என். அ., அவர்கள், 10-6-48ல் (திருச்சி வானொலி நிலையத்தில்) "பொதுக் கல்வி சாதனங்கள்" என்ற பொதுத் தலைப்பில், நிகழ்த்திய சொற்பொழிவு.

★

உலகிலே எங்கேனும் ஓரிடத்தில் ஏதோ ஒரு காரணத்தால் நேரிடும், ஏதோ ஒரு சம்பவம், உலகின் மற்ற பாகங்களைப் பாதிக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம். பாலஸ்தீனில் போர், அதைப்பற்றிய வாதப் பிரதிவாதம், பாளையங் கோட்டையில். இத்தாலியில் எலக்ஷன் என்றால், இங்கு, எந்தக் கட்சி அங்கு வெற்றி பெற வேண்டும் என்பதுபற்றி, விவாதம். உலகத்தொடர்பு அதிகரித்துவிட்ட, வளர்ந்துகொண்டே போகும் நாட்களிலே நாம் வாழ்கிறோம். வாழ்கிறோம் என்றால் நமது வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் வளமாக்கும் பெரும் பொறுப்பை ஆயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்தவர்களிடம் ஒப்படைத்து விட்டல்ல. யார் சிரத்திலே மணிமுடி ஜொலிக்கிறது, எவர் கரத்திலே உடைவாள் மின்னுகிறது என்று பார்த்து ஆட்சிப் பொறுப்பை அப்படிப் பட்டவர்களிடம் ஒப்படைத்துவிட்டுமல்ல. ஆட்சிப் பொறுப்பை மக்கள் ஏற்றுக்கொண்டு நாட்டின் நாயகர் நாங்கள் என்று மார் தட்டிக் கூறிக்கொண்டுள்ள நிலை இருக்கிறது. உலகுக்கு இது நன்கு தெரியும்.

உலகின் கவனம் நமது நாட்டின்பக்கம் நன்றாகத் திரும்பும் படியான முறையிலும் அளவிலும் நாம் நமது நாட்டின் சிறப்புப்பற்றியும் நமது ஆற்றலைப் பற்றியும் பாட்டு மொழியிலே

பேசிவிட்டோம் — சற்று அதிகமாகவே கூட. எம் நாடு பொன்னாடு, ஏது இதற்கோர் ஈடு என்று திருப்புகழ் பாடினோம். இங்கு வானை முட்டும் மலைகள், வற்றாத ஆறுகள், வளமான வயல்கள், கனி குலுங்கும் சோலைகள் ஏராளம். முத்து உண்டு எமது கடலில், தங்கம் உண்டு எமது பூமியில் என்று ஆனந்தக் களிப்புச் சிந்து பாடியிருக்கிறோம். 'எல்லாம் சரி, உமது நாட்டுக் கல்வி நிலையைக் கூறு,' என்று கேட்டால் நாடு வெட்கித் தலைகுனியும் நிலையில் இருக்கிறது. வேதவேதாந்திகள், சித்தாந்த சிரோன்மணிகள், திரு அருளைப் பெற்றவர்கள் எமது நாட்டிலே உண்டு என்று பேசலாம், பேசுகிறோம்— இன்னும் சிலர் பேசிக்கொண்டே இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் கண்ணனுக்குக் கையெழுத்துப் போடத் தெரியுமா என்றால், தலையை ஆட்டுகிறான், முத்தனோ மறந்துவிட்டது என்று கூறுகிறான், முனியன் கையெழுத்திடுகிறான், ஆனால் முன்னெழுத்தும் கடையெழுத்தும் சரியாக இருக்கிறது, இடையிலே உள்ள எழுத்துக்களோ சம்மந்தமற்றவைகளாக உள்ளன — இந்நிலை இருக்கிறது நாட்டு மக்களிலே மிகப் பெரும்பாலானவர்களுக்கு.

கூரியவாள், பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு, ஆனால் அந்த வீரனின் விழி பழுது. இந்நிலை, நாட்டுக்குச்சிறப்பும் அளிக்காது, நல்லாட்சிக்கு வழியும் கிடைக்காது. நாட்டு நிலை உலக நிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டு நிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தக சாலை என்ற இலட்சியம், நாட்டிற்கோர் நல்ல நிலை ஏற்படச் செய்யவேண்டும் என்ற திட்டத்திற்கு அடிப்படை. மலைகண்டு, நதிகண்டு, மாநிதி கண்டு அல்ல ஒரு நாட்டை உலகம் மதிப்பது— அந்த நாட்டு மக்களின் மன வளத்தைக் கண்டேயாகிலும் மதிக்கும். மனவளம் வேண்டும்— மிகமிக விரைவில்— மிகமிக அதிகமாக. எழுத்தறிவற்றவர்களோ ஏராளம் இந்நாட்டில்— இது பெருங்கேடு, கல்வி பெற்றவர்கள் அனைவருக்குமாவது மனவளம் இருக்கிறதா, அவர்களின் வீடுகளாவது, நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துக்கள் மலரும் சோலைகளாக உள்ளனவா என்றால், இல்லையென்று பெருமூச்சுடன் கூறித்தான் ஆகவேண்டும்— உள்ளதை மறைக்காமலிருக்க வேண்டுமானால். நாட்டு நிலை கண்டு உலகம் மதிக்க வேண்டுமானால், இந்தச் சூழ்நிலை மாறியாகவேண்டும். மன வளம் வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்று சிரமப்பட்டால், நமது

நாட்களிலே நிச்சயமாக மனவளத்தைப் பெறமுடியும்.

நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததைவிட அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில், ஆற்றோரத்தில், பர்ணசாலைக்குப் பக்கத்தில், ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித் தரும் முறை இருந்த காலம். ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது, உலகை நமது வீட்டுக்கு அழைத்து வந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்த மார்க்கம், முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம். இதோ நான் பேசுகிறேன்—நீங்கள் கேட்கிறீர்கள்—இடையே, பலப்பல மைல்கள்—நானோ நீங்களோ, தவசிகளல்ல—அருளால் அல்ல இந்த ஒலி அங்கு கேட்பது. அறிவின் துணை கொண்டு விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விதச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள் நமது முன்னோர்கள் காலம்.

இவ்வளவு வசதிகள் நமக்கிருந்தும், ஏன், மனவளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே, மனவளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ, நாம் முயற்சி செய்வதில்லை—வழிவகை தேடிக்கொள்வதில்லை.

பெரும்பாலான வீடுகளின் அமைப்பையே பாருங்கள். கூடம் இருக்கும் விசேஷ காரியங்களுக்குப் பயன்பட. கூடத்து அறை இரண்டிருக்கும் அதிலொன்று பூட்டியே இருக்கும், சாவி வீட்டின் அதிபரிடம் இருக்கும். மற்றோர் அறையிலே தொட்டிலோ, ஏணையோ இருக்கும், அங்கு தூங்கும் குழந்தையை வேறோர் குழந்தை தொல்லைப் படுத்தும், அதைவிடப் பெரிய குழந்தை, இதனைச் சமையலறையிலுள்ள தாயிடம் சென்று கூறும், பூஜை அறையில் அப்பா இருப்பார் போய்ச் சொல் என்று தாய் கூறுவாள், அங்கு அவர் இருக்க மாட்டார், மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்தில் உள்ள திண்ணையில் படுத்துக் கொண்டிருப்பார். நம் வீடு, ஏறக்குறைய இது போலிருக்கும். கூடம்—பாதுகாப்பான அறை—படுக்கை அறை—சமையலறை—பூஜை அறை—இவை எல்லாம் இருக்கும்—புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஒரு அறை தேடிப்பாருங்கள் மிக மிகக் கஷ்டம். பல வீடுகளிலே, தூண்களின் மீது, சரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில், சில புத்தகங்கள் இருக்கும். ஆனால், புத்தக சாலை உண்டா என்று கேளுங்கள்—பதில் கூறமாட்டார்கள். ஒரு புன்னகை தோன்றும். பைத்தியக்காரா, இது வீடு. நீ என்ன இங்கு வந்து புத்தக சாலை

கேட்கிறாயே, என்று பொருள் அந்தப் புன்னகைக்கு.

வீடுகளில், மேஜை நாற்காலி சோபாக்கள் இருக்கும், பீரோக்கள் இருக்கும், அவைகளில் வெள்ளித் தாம்பாளமும் விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும், பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும், உடைகள் சிறு கடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு இருக்கும் அப்படிப் பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூடப் புத்தக சாலை இராது —இருக்க வேண்டுமென்ற எண்ணம் வருவதே இல்லை, அவசியம் தோன்றுவதில்லை.

இந்தச் செப்புக் குடம் சீரங்கத்தில் வாங்கியது, தேவா கலியாணத்தின்போது, திருப்பதியில் வாங்கினோம், இந்தத் தாம்பாளத்தை, பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம் இந்த இரத்தின ஜமக்காளத்தை, கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணாமலையில் இதை வாங்கினோம், சிதம்பரத்திலே ஆருத்ராவின்போது இதை வாங்கினோம், என்று நமது வீடுகளில், பல சாமான்களைக் காட்டுவர்— சாமான் ஒவ்வொன்றுக்கும் ஒரு சிறு சரித்திரமே கூறுவார்கள். ஆனால் பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி, இன்ன சந்தர்ப்பத்தில் இன்ன இடத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூறப்பட்டார்கள்.

வீட்டின் அலங்காரத்தையும் விசேஷ கால உபயோகத்துக்கான சாதனங்களையும் கவனிப்பதுபோல, வீட்டிற்கோர் புத்தகசாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்தவேண்டும். அக்கறை காட்டவேண்டும். அறிவு ஆயுதமாகிவிட்ட நாட்களிலே வாழும் நாம், இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது, நாட்டுக்கு நாம் மறைமுகமாகச் செய்யும், துரோகச்செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும் - வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப்பொருள்களுக்கும், போக போக்கிப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை, அடிப்படைத்தேவை - அந்தத் தேவையைப் பூர்த்திசெய்தானதும், முதல் இடம், புத்தகசாலைக்குத் தரப்படவேண்டும்.

எவ்வளவு செலவு, ஏது அவ்வளவு பணம் - என்று கேட்பர். பலருக்குத் தேவையான அளவு புத்தகம் வாங்கத்தான் முடியாது - அந்தக் குறையைப் போக்க, பொதுப் புத்தகசாலைகளை நடத்தி சர்க்கார், நகரசபைகள், பொதுநலக்கழகங்கள் பணிபுரிய வேண்டும். ஆனால் சில அடிப்படை அறிவுக்குத்தேவையான புத்தகங்களையாவது வீடுகளில் சேகரித்துப் பயன்படுத்தும் முறைஇருக்கவேண்டும்.

பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்குமட்டுமல்ல, ஏற்கனவே நமது மக்களுக்குத் தெரிந்திருக்கிற பல விஷயங்களை மறந்து போகச் செய்வதற்குப் பல புத்தகங்கள் தேவை. நமது மக்களுக்கு, கைலாயக் காட்சிகள், வைகுந்த மகாத்மியம், வரலட்சுமி நோன்பின் மகிமை, நாரதரின் தம்பூரு, நந்தியின் மிருதங்கம், சித்ரா புத்ரனின் குறிப்பேடு, நரகலோகம், அட்டைக்குழி அரணைக்குழிகள், மோட்சத்தின் போகனப, இந்திரசபையின் அலங்காரம், அங்குப்பாடி ஆடும் மேனகையின் அழகு இவையெல்லாம் தெரியும். ஆறுமுகம் தெரியும் அவர் ஏறும் மயில் தெரியும் - அம்மை வள்ளிக்கும் அழகி தெய்வயானைக்கும் ஏசல் நடந்தது தெரியும், இவையும் இவை போன்றவையும் ஏராளமாகத் தெரியும்.

நந்திதுர்க்க மலை எங்கே? தெரியாது என்பர். நிதி மந்திரியின் பெயர் என்ன? அறியோம் என்பார்கள். காவிரியின் பிறப்பிடம்? கவலைகொள்ளார். பாலாற்றில் நீர் ஏன் இல்லை? சொல்லத் தெரியாது. நூல் ஆலைகள் எவ்வளவு உள்ளன? கணக்கு அறியார். தாராபுரம் எந்தத்திசையில் இருக்கிறது? தெரியாது. தாமிரபரணி எத்தனை மைல் நீளம் ஓடுகிறது? திகைப்பர், பதில அறியாமல். அவர்கள் வாழும் மாவட்டத்தின் அளவு என்ன? தெரியாது என்பர். மாகாணத்தின் வருமானம் என்ன? அறியார்கள் - அறிந்துகொள்ளவும் முயல மாட்டார்கள். அனுமத்பிரபாவம் தெரியும், அரசமரத்தைச் சுற்றினால் என்ன பலன் கிடைக்கும் என்பதைக் கூறத்தெரியும். பேய், பில்லி சூனியம்பற்றிய கதைகளைக் கூறத்தெரியும். அவர்கள் ஏறிச்செல்லும் ரயிலைக் கண்டுபிடித்தவர் யார் என்பது தெரியாது அதிலேறிச் செல்லும் இடத்திலே அவர்கள் தரிசிக்கப்போகும் கருணானந்த சுவாமிகளின் கால்பட்ட தண்ணீர் கர்மநோய்களைப்போக்கும் என்ற கதை பேசத்தெரியும்.

இது நமது மக்களின் மனவளம். இவர்கள் பெரும்பாலோர். இவர்களைக்கொண்டு உள்ள நம் நாடு, அழிவுச் சக்தியில் அணுக்குண்டு உற்பத்தியும், ஆக்கவேலைச் சக்தியில், சந்திர மண்டலத்திற்குச் சென்றுவரும் ஆராய்ச்சியும் நடத்திக்கொண்டு வரும் உலகிலே, ஓர் பகுதி. சரிடா? நாட்டின் எதிர்காலத்திலே அக்கரை கொண்ட யாரும் இந்த நிலை சரி என்று கூறமாட்டார்கள். சரியல்ல தான், ஆனால் என்னசெய்வது? என்று கேட்பர். வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்கவேண்டும் - மக்களின் மனதிலே உலக அறிவு புக வழிசெய்ய வேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும் - நிபுணத்துவம் தரும் ஏடுகள் கூட அல்ல -

அடிப்படை உண்மைகளையாவது அறிவிக்கும் நூல் சிலவாவது வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விசேஷங்களின்போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடக்கும்போது, புத்தகங்கள் வாங்குவது என்ற ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக் கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தக சாலையை அமைத்துவிடலாம்.

புத்தகசாலை அமைக்கும் போது, ஏற்கனவே நமது மக்களின் மனதிலே ஊறிப்போயுள்ள, அர்த்தமற்ற, அவசியமற்ற, கேடுகூடச் செய்யக்கூடிய எண்ணங்களை நிலை நிறுத்தக்கூடிய ஏடுகளைச் சேர்க்கக்கூடாது. சேர்ப்பதால் மன வளம் ஏற்படாது. மனம் சதுப்பு நிலமாகும், பழமைப் புழுக்கள் நெளியுமிடமாகும்.

புத்தகசாலை அமைப்பது என்று திட்டமிட்டு, புது வருஷப் பஞ்சாங்கத்தில் ஒரு மூன்று தினுசும், பழைய பஞ்சாங்கக்கட்டு ஒன்றும், பவளக்கொடி மாலையும், பஞ்சாமிர்தச் சிந்தும், பெரிய எழுத்து விக்கிரமாதித்யன் கதையும், பேய் பேசிய புராணமும், நல்லதங்காள் புலம்பலும், அரிச்சந்திரன் மயானகாண்டமும், ஆகியவற்றை அடுக்கி வைத்தால், நாம் கோரும் மனவளம் ஏற்படாது. நமது நாட்டை வஞ்சகர்களுக்கு ஏற்ற வேட்டைக்காடு ஆக்கும். வெடி மருந்துக்குத் தீக்குச்சி சேர்ப்பது போலாகும்.

உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும். பழைய முறைகளையும் எண்ணங்களையும் மேலும் ஊட்டக்கூடிய ஏடுகளைச் சேகரித்து, அதற்குப் புத்தகசாலை என்று பெயரிடுவது, குருடர்களைக் கூட்டி வைத்து, அவர்கள் உள்ள இடத்துக்கு, வழிகாட்டுவோர் வாழும் இடம் என்று பெயரிடுவது போன்ற கோமாளிக்கூத்தாக முடியும்.

ஒவ்வோர் வீட்டிலும், வசதி கிடைத்ததும், வசதி ஏற்படுத்திக்கொண்டதும், அமைக்க வேண்டிய புத்தகசாலையில், நாட்டு வரலாறு, உலக நாடுகளின் நிலையை குறிக்கும் நூற்கள், இவை முதலிடம் பெற வேண்டும். பொதுவாகவே, மக்களின் அறிவுக்குத் தெளிவும், ஆண்மைக்கு உரமும், ஒழுக்கத்துக்கு வலிவும் தரத்தக்க நூற்கள் இருக்க வேண்டுமேயொழிய, வாழும் இடத்தை வகையற்றது என்று கூறி, வானவீதிக்கு வழிகாட்டும் நூற்களும், மாயாவாதத்தையும் மனமருட்சியையும் தரும் ஏடுகளும், தன்னம்பிக்கையைக் கெடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்தி, பெண்களை இழித்-

தும் பழித்தும் பேசிடும் நூற்களும் இருத்தலாகாது.

பஞ்சாங்கம் அல்ல, புத்தகசாலையில் இருக்க வேண்டியது— அட்லாஸ் — உலகப் படம் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படைப் பிரச்னையிலே நேர்மையான முறைமையும், நெஞ்சு உரத்தையும் காட்டியாக வேண்டும். அப்போதுதான் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைப்பது என்பது, அறிவுத் தெளிவுக்கு வழி செய்யும்— மனவளத்தை உண்டாக்கும் —நாட்டை வாழவைக்கும். புலியை அழைத்துப் பூமாலை தொடுக்கச் சொல்ல முடியாது. சேற்றிலே சந்தன வாடை கிடைக்குமென்று எண்ணக் கூடாது.

நமது பூகோள அறிவு, பதினாறு லோகத்தைக் காட்டிற்று அந்த நாட்களில். நமது மார்க்க அறிவு நரபலியைக் கூடத் தேவை என்று கூறிற்று அந்த நாட்களில். நமது சரித்திர அறிவு அறுபதினாயிரம் ஆண்டு ஒரு மன்னன் ஆண்டதாகக் கூறி வைத்தது. நமது பெண் உரிமைபற்றிய அறிவு, காமக் கிழத்தி வீட்டுக்கு, நாயகனைக் கூடையில் வைத்துத் தூக்கிச் சென்ற பத்தினியைப் பற்றி அறிவித்தது. நமது விஞ்ஞான அறிவு நெருப்பிலே ஆறும், அதன்மீது ரோமத்தால் பாலமும் இருப்பதாக அறிவித்தது.

அப்படிப்பட்ட எண்ணங்களுக்கு ஆதாரமாக இருந்த ஏடுகளை, இந்த நாட்களிலே நாம், வீட்டில், புத்தகசாலையில் சேர்ப்பது, நாட்டு நலனுக்கு நிச்சயமாகக் கேடு செய்யும்.

பூகோள, சரித, ஏடுகள் இருக்க வேண்டும் — நமக்கு உண்மை உலகைக் காட்ட. நமக்கு ஒழுக்கத்தையும், வாழ்வுக்கான வழிகளையும் காட்ட. வீட்டிற்கோர் திருக்குறள், கட்டாயமாக இருக்க வேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச் சிறப்பு என்று கூறத்தகும சங்க இலக்கிய சாரத்தைச் சாமான்யரும் அறிந்து ரசிக்கக்கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்க வேண்டும். குறைந்த பட்சம், மக்கள் முன்னேறத் தக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மன மாசு துடைத்தவர்கள், தொலை தேசத்தைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள், ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை— ஆனால் கேட்டினை நீக்கிடத் தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்க வேண்டும், வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.



புரட்சி வீரன் புருனோ

K. A. மதியழகன்

மானிட சமுதாயம் இன்றுள்ள முற்போக்கை — உன்னத நிலையை அடைவதற்கு எத்தனையோ தலைமுறைகள் கழிந்திருக்கின்றன. இன்று எவை எவை அறிவுப் புரட்சியின் பயன் என்று கூறுகிறோமோ, அவை உருவாவதற்குக் காரணமாய் இருந்த உத்தமர் பலர் பலிபீடத்திலே ஏற்றப்பட்டுள்ளார்கள். சிறையிலே சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர். தூக்கு மரத்திலே தொங்கவிடப்பட்டுள்ளனர். நாடு கடத்தப்பட்ட, நாடோடிகளாக்கப்பட்ட, நஞ்சூட்டப் பெற்ற வீரர்களின் வேதனைமிக்க வரலாறு உலக சரித்திரத்திலே ஏராளமாக உண்டு. மனித வாழ்வில் அறிவுக்கும் — சிந்தனைக்கும் பூட்டப்பட்டிருந்த விலங்குகளை ஒடித்தெறிந்த பிறகுதான் புதிய உலகம் உதயமாகியது. இந்த ஒப்பற்ற தொண்டிற்குத், தங்கள் உடல் உடமை, உயிர் அத்தனையும் அர்ப்பணித்த அஞ்சா நெஞ்சர்கள் ஆயிரமாயிரம் பேர்.

15-16ம் நூற்றாண்டுகளிலே ஐரோப்பா மண்டலத்திலே உள்ள பல்வேறு நாடுகளிலே பழமையின் சீற்றத்திற்கு— வைதீகத்தின் கொடுமைக்கு— கத்தோலிக்க மதத்தின் காட்டுமிராண்டித்தனத்திற்குத் தங்கள் உயிரைப் பணயமாக வைத்து, ஊராருக்கு உண்மையை உரைத்துத் தியாகத் தீயிலே குளித்தவர்கள் பலப் பலராவர். கலிலியோக்கள், செர்விடஸ்கள், புருனோக்கள் அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

நாம் கூறும் புருனோ பிறந்த வேளை, ஐரோப்பாவிலேயே நெருக்கடியான சமயம். பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்ட சமயம் பழைய பழக்க வழக்கங்களைப் பகுத்தறிவு உரை

கல்லிலே பரிசீலனை செய்யத் தலைப்பட்ட காலம். புதுமையின் முன்னேற்றத்தின் வாடை எங்கும் வீசிய நேரம். இந்தக் கொந்தளிப்பான பருவத்திலே, 1548-ம் ஆண்டிலே புருனோ கலாப்ரியா (Calabria) பகுதியிலே நோலா (Nola) என்ற இடத்திலே பிறந்தான். கோள் நிலை யறிந்த கோபர்னிகஸ் இறந்து ஐந்து ஆண்டுகளே ஆகியிருந்தன. நட்சத்திர மண்டலத்தைப் பற்றி அவரது கருத்துக்கள் எங்கும் நர்த்தனமாடிக் கொண்டிருந்தன. கலிலியோவைச் சிறைச்சாலையில் பிடித்துத் தள்ளிய கடுமையான அக்கிரமம் நிகழ்வதற்கு 16 ஆண்டுகளுக்கு முன், ஏன்? ஷேக்ஸ்பியர் தோன்றுவதற்கு 16 ஆண்டுகளுக்கு முன்தான் ஜியார்டனோ புருனோ (Giordano Bruno) பிறந்தான். சுருங்கச் சொன்னால், அதிசயிக்கத்தக்க, அற்புத மாறுதல்கள் எங்கும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன.

அமெரிக்காவைக் கண்டு பிடித்ததினால் உலகம் விரிந்தது. கோபர்னிகஸ் தத்துவங்களின் பலனால் ஆகாய மண்டலத்திலே பல புதிய கோள்கள் காணப்பட்டன. மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, மார்ட்டின் லூதர் இறந்து இரண்டாண்டுகள் முடியவில்லை. சீர்திருத்த இயக்கத்திற்கு விரோதமாய் மதவாதிகள் மார் தட்டினர். மதவிசாரணை மன்றங்கள் புதுப்பிக்கப்பட்டன. சுயமாகச் சிந்தனை செய்பவன், சுதந்திரமாகப் பேசுகிறவன்—இவர்களுக்குப் பரிசோதனைப் பருவம். ஆனால் அஞ்சா நெஞ்சர் ஆண்மையுடன், கொண்ட கருத்தைக் குவலயத்திற்குக் கூறினர்.

இந்தச் சூறாவளி வீசிய சூழ்நிலையிலே, மறுமலர்ச்சி இயக்கம் மக்கள் வாழ்விலே மாறுதலைப் புகுத்திய தருணத்திலே, புரட்சி வீரன் புருனோ ஓர் போர்வீரனின் புதல்வனாய்த் தோன்றினான். மூர்க்கத் தன்மையும் முரட்டுப் பிடிவாதமும் எதையும் கற்க வேண்டுமென்ற தணியாத அறிவுத் தாகமும் இவனிடம் தவழ்ந்த பண்புகள். டாமினிக்கன் பிரிவைச் சார்ந்த படாலயத்திலே இளமையிலே பாதிரியானான். இந்த வாலிபப் பாதிரியின் கேள்விகளும், விசாரணைகளும் இவனை ஓர் வேதநிந்தகன் விதண்டாவாதி எனச் சந்தேகிக்கச் செய்தன.

நேப்பில்ஸ் நகர வழக்கு மன்றத்திலே இவன் மீது மத விரோதி என்று குற்றஞ் சாட்டப் பெற்று இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மன்றத்தார் முன் தோன்றுமாறு ஆணையிடப்பட்டான். இந்த விசித்திரப் பாதிரி அந்தக் கட்டளைக்குப் பணியவில்லை. ஊரை விட்டே பறந்துவிட்டான். அதுமுதல் பல்வேறு நாடுகளிலே சுற்றித்திரிந்தான். ஜினீவா பாரிஸ், ஆக்ஸ்போர்ட் ப்ரேக் போன்ற பல நகரங்களிலே தங்கினான் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அடிக்கடி மாறினான். சொற்பொழிவு, உரையாடல், விவா

தம், சச்சரவு—இவைகள்தான் அவனது தொழில். இம்மாதிரி நாடோடி வாழ்க்கை அக்காலத்திலே சகஜமாய் இருந்தது. ஐரோப்பிய அறிஞர்களிடம் சமத்துவத்தின் சாயல் படர்ந்திருந்தது. படித்த, பண்புள்ள நாகரிக மக்கள் இலத்தீன் மொழியை இலாவண்யமாகப் பேசினர். படித்த மக்களைப் பல்கலைக் கழகங்கள் பரிவுடன் வரவேற்றன, உண்டியும் உறையுளும் கொடுத்து உபசரித்தன.

புருனோவின் அறிவும் திறனும் பலரது தோழமையைத் தேடித் தந்தன. பிரஞ்சு நாட்டின் மூன்றாம் ஹென்றி அவன் ஆதரவாளன், இங்கிலாந்திலே தங்கியிருந்த நேரத்திலே, பிரஞ்சுத் தூதுவரின் மாளிகையிலே விருந்தினன். அக்காலத்து அரசியல் அறிஞர்கள் பர்க்லே (Burghley) வால்சிங்ஹாம் (Walshingham), மெண்டோசா (Mendoza) முதலியோர் அவனுக்கு அறிமுகமானவர்கள் சர் பிலிப்சிட்னி இவனது நண்பர். ஸ்பென்சரைக் (Spencer) கூட இவனுக்குத் தெரியும் எனக் கூறப்படுகிறது இவனது துணிச்சலும் ஊக்கமும் தொல்லையையே விளைவித்தன. எந்த இடத்தையும் வாழ இலாயக்கற்ற தாக்கிக் கொண்டான். துதி ஓர் பக்கம் தூற்றல் ஓர் பக்கம் பாராட்டுதல் ஓர் புறம் பழிச்சொல் மற்றோர் புறம் மாறிமாறிப் பரிமாறப்பட்டன.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆற்றிய சொற்பொழிவிலே தன்னைப் பற்றி இப்படி அறிவிக்கிறான்:-

"தெளிந்த பேராசிரியன், ஐரோப்பிய பல்கலைக்கழகங்களின் மரியாதையையும் ஆமோதிப்பையும் பெற்ற தத்துவ ஞானி; அறியாமை உறக்கத்திலிருந்து அவனியோரை எழுப்பும் தூண்டுகோல், மடமை நோய்க்கு மருத்துவன், மானிட சமுதாயத்தின்பால் அன்பு பூண்டோன். இவன் ஆண், இவள் பெண் என்ற பேதாபேதம் பார்க்காதவன். இவன் இங்கிலாந்துக்காரன் இவன் இத்தாலியன் என்ற வேறுபாடு கருதாதவன். இவன் மன்னன் அவன் மதத்தலைவன் என்ற வித்தியாசம் நினைக்காதவன். யார் யார் அன்பு, எளிமை, அமைதி, நற்குணம், இவைகளின் உருவங்களோ, அவர்கள் அத்தனை பேரையும் ஒரு சேர நேசிப்பவன். கபடர்கள் என்னைக் கண்டனம் செய்யலாம், பித்தலாட்டப் பொய்மைப் பிரசாரகர்கள் பொறுமையினால் என் மீது எரிந்து விழலாம் ஆனால் நேர்மையாளர் நல்லறிவுடையோர் என்னை நன்குணர்ந்தவர்கள் எனக்குப் புகழ் மாலை சூட்டுகின்றனர்; பாராட்டுமொழி நல்குகின்றனர்."

அவன் எழுத்துக்களில் உபமான உபமேயங்கள், அணி வகைகள் அலங்கரித்தன. தத்துவங்களைப்பற்றி மிக்க எழில்மைந்த கவிதைகளிலும் உரை நடையிலும் வரைந்தான். புருனோ என்ற பெயரிலே புகழ் பெற்ற அவன் அற-

ிய எழுத்துக்களினால் ஐரோப்பா முழுதும் அறிமுகப் படுத்திக்கொண்டிருந்தான். முன்னரே நேபிள்ஸ் நீதி மன்றத்திலே இரண்டு வழக்குகளிலே குற்றஞ் சாட்டப்பட்டு அதைத்தவிர்க்க தலை தப்பி ஓடியவன், எந்த இத்தாலிய மண்ணிலே விதிக்கப்பட்ட தண்டனையைத் தவிர்க்க தலை தப்பி ஓடினானோ அதே தரணியிலே காலெடுத்து வைப்பது எவ்வளவு பைத்தியக்காரத் தனமானது! இருந்தும் விபரீதமான போக்கைக்கொண்டான். வெனிஸ் நகரிலே நுழைந்தான். அதற்குக் காரணம் வெனிஸ் மாநகரம் பல்கலையை வளர்ப்பதிலே ஆர்வமிக்க அழகு நகராகவும் பாதுகாப்பற்றவர்களுக்கு அடைக்கலம் அளிக்கும் கோட்டையாகவும் இருந்ததே. ஆனால் அங்கு உறைவது, எரிமலைமேல் வாசம் என்றே அவனது நண்பர்கள் எண்ணினர்.

புரூனோ அங்கு சென்றதற்குக் காரணம், மொசினிகோ (Mocenigo) என்ற வாலிபச் சீமான். புரூனோவிடம் இவன் கொண்ட பிரியத்திற்குக் காரணம் ஞாபகச் சக்தியைப்பற்றிய சில சூட்சமங்கள் புரூனோவுக்குத் தெரிந்திருப்பதாகவும், அதை எப்படியும் கற்றுத் தெளியவேண்டுமென்ற துடி துடிப்புமேயாகும். அந்தக் கருத்திலே புரூனோவை ஆசானாய்க் கொண்டு மாணவனாய் அமைந்தான் ஆருயிர் நண்பன் போலவும் நடித்தான். ஆனால் மொசினிகோ அகம்பாவத்தின் சொரூபம், வஞ்சகத்தின் இருப்பிடம் பொறாமையின் களஞ்சியம். இந்த நயவஞ்சகனின் நாசகாரச் சதியிலே புரூனோ மோசம் போனான். வெனிஸ் மாநகர மத விசாரணை மன்றம் பல நாட்கள் அவன் பக்கம் தன் பார்வையைத் திருப்பவில்லை. ஓர் ஆண்டு வரை அதன் அடக்குமுறை தொடுக்கப்படவில்லை. ஆனால் குறுகிய மனோபாவமும் குள்ள நரிக்குணமும் கொண்ட மொசினிகோவின் உருவிலே சதிகாரத்திட்டம் தயாராகியது. எந்த சூட்சமத்தைப் புரூனோவிடம் கற்கலாம் என்று கனவு கண்டானோ அது நிறைவேறவில்லையே என்ற சபலம், புரூனோவைப் புரட்டன் என்று கருதிய அவன் தந்தை தந்த போதை, வழக்கு மன்றத்திலே உறுப்பினனாய் இருந்ததால் பழக்கப்பட்டிருந்த வஞ்சகத் திட்டம்- இவை அத்தனையும் மொசினிகோவைத் தன்னை நம்பிவந்த வீரனைக் காட்டிக் கொடுக்கச் செய்தன. 1592-ம் ஆண்டு மே மாதம் 23-ம் நாள் எந்த மொசினிகோ வெனிஸ் நகரிலே அவனுக்கு வரவேற்பளித்தானோ, வாஞ்சையுடன் அதுவரை காத்திருந்தானோ அவனாலேயே கைது செய்யப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டான்.

புரூனோவின் வழக்கை விசாரிக்க இருந்த வெனிஸ் மத மன்றம் பல புதுமைகளைக் கொண்டது. அதனுடைய விதிகள் விலங்குக் காலத்தை நினைவூட்டத் தவறா. வேதனை

யூட்டும் முறைகள் அங்கு வாடிக்கையாக அனுசரிக்கப்பட்ட நடவடிக்கைகள். குற்றவாளி பொது மண்டபத்திலே வாதிப்பதோ சாட்சிகளை அவையின் முன் நிறுத்தி சாட்சியங் கேட்பதோ, குறுக்கு விசாரணை புரிவதோ குற்றவாளியின் சார்பில் வாதாட வழக்கறிஞர் அனுமதிக்கப்படுவதோ, குற்றமற்ற தன்மையை நிறுவ சாட்சிகளை அழைப்பதோ அங்கு நடைபெற முடியாத சில காரியங்கள்.

1592 மே மாதம் 23 நாள் நீதிமன்றத்தின் முன் 'என் மனசாட்சியின் தூண்டுதலும் எனது தந்தையின் கட்டளையும் இவனை இம்மன்றத்திலே ஒப்புவிக்க நிர்ப்பந்தித்தன. இவன் ஓர் மத விரோதி, ஏற்கனவே ரோமாபுரி மத விசாரணை மன்றத்துடன் மல்லுக்கு நின்று மறைந்து ஓடியவன், எனது வாதத்திற்கு அரண்செய்ய அவன் எழுதிய ஏடுகளின் பிரதிகள் என்னிடம் உள்ளன, சாட்சிகளும் ஏராளமாக உண்டு'' என்றும் ''இவன் பல நேரங்களிலே என்னிடமே இந்த மன்றத்தைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் மதிப்புக்குறைவாகப் பேசிய மாபாதகன், இவைகளிடம் தனக்கு அச்சமில்லை என்று ஆர்ப்பரித்த அக்ரமக்காரன்'' என்றும் குற்றச்சாட்டுகளைக் கூறினான் மொசினிகோ.

விசாரணை ஆரம்பமாகியது. ஏறக்குறைய நாலு மாதங்கள் வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அதன் சம்பிரதாயத்திற்கு ஏற்ப சாட்சிகள் பலர் குற்றவாளிக்குச் சந்தர்ப்பமில்லாமல் விசாரிக்கப்பட்டனர். குற்றத்திற்குச் சாதகமாக ருசுகரத் தகவல் ஒன்றும் அகப்படவில்லை. யாரோ ஒருவன் மட்டும் புருனோவுக்கு மதம் கிடையாது என்பதைத் தான் அறிவதாகக் கூறினான். கடைசியாகக் கைதியிடம் செய்திகளைத் திரட்ட வருணனைக்கு அகப்படாத கொடூரம் நிறைந்த பலவழிவகைகளையும் முறைகளையும் கையாண்டனர்.

கோர்ட்டின் முன்னிலையில் புருனோ கொண்டுவரப்பட்டான். அவன்மேலுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் தேவை என்ற கட்டளை பிறந்தது. புருனோ அவன் வாழ்வின் அத்தியாயங்களை விவரித்தான். அவன் சஞ்சாரம் செய்த நாடுகள், அவன் சிந்தனையின் விளைவான ஏடுகள், அத்தனையையும் பற்றிக் கூறினான். தனது தத்துவ விசாரணையிலே எவை எவை நியாயம் உண்மையெனப்பட்டதோ அவற்றையே தனது நூல்களிலே தீட்டியிருப்பதாக உரைத்தான். கத்தோலிக்க மதத்தைத் தாக்கவேண்டுமென்ற ஆசையாலோ, தகர்த்துத் தரைமட்டமாக்க வேண்டுமென்ற கருத்தாலோ தனது பேச்சோ, எழுத்தோ அமைந்ததல்ல என்று விளக்கிக் கூறினான். இவனது விளக்கமோ ஆணித்தரமான மறுப்போ அந்த மந்தகாச

வாழ்வினரின காதிலே ஏற வில்லை மேலும் மேலும் கோர்ட்டார் அவனது கொள்கைகளைப் பற்றியும், நூல்களைப் பற்றியும் குறுக்கு விசாரணை புரிவதிலும் நூல்களையும் கொள்கைகளையும் தமது சுயநலமென்னும் உரைகல்லில் இட்டுப் பார்ப்பதிலும் நாட்களை ஓட்டினர். ஆனால் உண்மையைக் கூற வேண்டுமானால் இவனது கொள்கையைப் பற்றியோ நூல்களைப்பற்றியோ ஆராயும் அறிவு ஆண்டவனைக் காப்பாற்ற அவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்ட அதிசய புருஷர்களுக்குக் கிடையாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வேதனையின் உருவமானன் புருனே. அவனது நாடி நரம்புகளெல்லாம் தளர்ச்சியுற்றன. சிறைச்சாலையின் சித்ரவதைகள் அவனது உள்ளத்தையே உளிகொண்டு உடைப்பது போல் இருந்தன. பயங்கர எண்ணங்கள் சோகமுடிவுகள், இவையே அவனது இதயத்திலே நிழலிட்டன.

இந்தச் சமயத்தில் ரோமாபுரி மதத்தலைவர் குழு புருனேவை ரோமாபுரி வழக்கு மன்றத்தின் முன் விசாரிக்கப்பட அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. இதைப் பற்றி விவாதிக்க வெனிஸ் செனட் கூடியது. சிலர் வெனிஸ் தீர்ப்பளிக்கட்டும் என்றனர். வேறு சிலர் ரோமுக்கு அனுப்பிவிடலாம் என்றனர். இதைப்பற்றிய சர்ச்சை பலமாக நடந்தது. "புருனே வெனிஸ் நகரத்தவனல்ல. ரோம் நகரிலே ஏற்கனவே குற்றஞ்சாட்டப் பட்டவன் எனவே அவர்களிடம் ஒப்படைத்தலே நியாயம்" என்பது ஒருசாரார் வாதம் "ஆண்டவனுக்கு எதிராக குற்றஞ் செய்கின்ற அக்கிரமக்காரன் அவனியிலே எந்த இடத்திலே தண்டிக்கப் பட்டாலும் தகும், தவறல்ல முறையானது" என்பது மற்றோர் சாரார் முடிவு. எப்படியோ இறுதியாகப் போப்பாண்டவரின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டான். அந்தத் தேதியிலிருந்து அவனைப்பற்றிய விவரம் ஒரு புதிராகவே உள்ளது. வெளியே தெரிகின்ற ஒரே செய்தி 1593-முதல் ஆறுண்டுகள் சிறையிலே கிடந்து சீரழிந்தான் என்பதே இந்த ஆறுண்டுகள் அவன் இருந்த நிலைமை—வழக்குத் தாமதத்திற்குக் காரணம் முதலியவற்றைப் பற்றிய உண்மைகள் தெரியவில்லை. ரோம் நகரிலே அக்காலத்திலே தங்கியிருந்த ஜெர்மானிய அறிஞர் சியோப்பியஸ் (Scioppius) தொகுத்துள்ள நூலிலே அவனைப்பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.

அக்காலத்தில் பலதடவை மதகுருமார்களால் விசாரணை செய்யப்பட்டான். தவறை உணர்வதாக ஒத்துக்கொண்டால் தயை புரிவோம் என்றனர். புருனேவோ தவறை உணர்ந்தவன்போல நடித்து மீண்டும் மீண்டும் அவர்களைத் திணறவைத்தான். இறுதியாக, அறிவு அநுபவம் ஆராய்ச்சி சட்ட நிபுணத்துவம் ஆகியவைகளில் நிகரற்ற மத வாதிகள் நீதிபதிகளாய்

அமர்ந்து புருனோவைப் பற்றித் தீர்ப்புக் கூறினர். தீர்ப்பிலே அவனது வாழ்க்கை, படிப்பு, போதனை, அவனது தவறைத் திருத்த தந்தையின் பரிவுடன் முயன்ற அரசாங்கத்தின் கவலை! முதலியவை எடுத்துக் கூறப்பட்டிருந்தன. மேற்கண்ட நிலையில் துன்பப்படுத்தப்பட்டு மதப் பிரஷ்டம் செய்யப்பட்டு இரக்கமற்ற தண்டனை விதிக்கப்படுவதற்குத் தங்களிடம் ஒப்படைக்கப் பட்டவனை புருனோவை " உயிருடன் தீயிலே இட்டுப் பொசுக்க வேண்டும் என்று இந்தக் கோர்ட் உத்தர விடுகிறது" என்பதே தரப்பட்ட தீர்ப்பு. இந்த மொழிகள் படிக்கப் பட்டவுடன் மண்டபம் முழுதும் பேச்சு மூச்சில்லை. அங்கு ஆட்சிகொண்ட கொடூரமான நிசப்தத்தை கிழித்துக் கொண்டு 'எனது அன்பார்ந்த நீதிபதிகளே! இந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்ளப்போகும் என்னைக் காட்டிலும் மிகுந்த பயத்துடன் நீங்கள் இத் தீர்ப்பை உச்சரித்திருக்கிறீர்கள்' என்ற தொடர் மண்டபத்திலே எதிரொலித்தது. கல்நெஞ்சர்கள் நிறைந்த அந்த இடத்திலே கருத்து நிறைந்த அந்த வார்த்தைகள் காற்றோடு காற்றாய் கலந்தது.

புருனோ காவலாளிகளால் சிறைக்கூடத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டான். மரணத்தைத் தவிர்க்க மன்னிப்புக் கேட்கச்செய்யலாம் என்று எட்டுநாள் தாமதிக்கப் பட்டது. இறத்தலை ஏளனமாகக் கருதிய அந்த இலட்சிய வீரன் அதற்கு இணங்கவில்லை. தீக்குண்டத்திலே புருனோவின் உடலம் வெந்து சாம்பலாகியது. செந்தீயிலே, சாவுமுனையிலே போராடிய நேரத்தில் ஏசுவின் உருவமைந்த சிலையொன்றை அவனிடம் அளித்தார்கள். வெறுப்புடன் கூடிய கேலிச் சிரிப்புடன் அதை வீசியெறிந்தான்.

புருனோ மாண்டுவிட்டான். ஆனால் மரணத்தின் தலைவாயிலிலே அவன் கூறிய மொழிகள் சாகாவரம் பெற்றன. அவனது அஞ்சா நெஞ்சத்தை, ஆண்மையை உலகு உள்ளளவும் ஒலிபரப்புவன.

"நான் போராடினேன் — அது போதும் — வெற்றியை நிர்ணயிக்க நான் வரவில்லை இந்த முயற்சியில் வெற்றி தோல்வி யாருக்கு வேண்டுமானாலும் இருக்கட்டும், ஆனால் எதிர்காலம் என்னைப்பற்றி ஒன்றை மட்டும் மறுக்காது. அதுவே நான் சாவதற்காக அஞ்சவில்லை. உண்மையாகவே யாருக்கும் சரணாகதி யடைந்துவிடவில்லை, கோழை வாழ்வைவிட வீரமரணமே நான் விரும்பிய பொருள்" இவையே புருனோவின் அந்தப் பொன்மொழிகள், மறச்சொற்கள், அஞ்சா நெஞ்சத்தின் தீப்பொறிகள், வீரத்தின் விளக்க வாசகங்கள். ஆம்! புருனோ விரும்பிய பொருள் கோழை வாழ்வல்ல, வீர மரணந்தான்!

ஒலிக்கும் சிலம்பு

இரா. குமுதத்தலைவனர்.

எல்லை கடந்த இன்பமும் துன்பமும்!

இன்பம் வழிந்தோடும் நிலவின் ஒளியில் காதலர்களோடு கூடியுள்ள காதலிகளைப் பார்க்கின்றோம். பகல் முழுவதும் எவ்வளவோ வேலைகளைச் செய்து கொண்டிருந்த இவர்கள் இன்பத்தின் எல்லைப் பொருள்களாக அன்றோ காணப்படுகின் றார்கள். இவர்கள் அணிந்துள்ள ஆடையணிகள் தாம் எவ்வளவு உயர்வானவை! எல்லாம் காதலர்களைக் களிப்பூட்டு வதற்காகவேதான். காலத்திற்கேற்ற கருவிகள் கையாளப் படுகின்றன. குளிர்காலமாக இருந்தால், நறும் புகைகள் எங்கும் எழும்பும். அகிற் கட்டைகளும் அயிர் என்னும் ஒரு வகைப் பொருளும் மணத்தோடு தீயின் நடுவில் புகைந்து கொண்டிருக்கும். ஆனால் இது வேனிற்காலமல்லவா! சித்திரை வைகாசித் திங்களில் இப் புகைகள் எதற்காக? எனவே இவற்றை இப்போது காண முடியவில்லை. அவை நீக்கப் பட்டு விட்டன.

அந்தப் பொருள்களுக்கு (ஏற்ப) மாறாக வடவேங்கட மலையிலிருந்து கொண்டுவந்த கல்லில் குடைந்து செய்யப்பட்ட தட்டுகளில், தென்பொதிய மலையில் பிறந்த சந்தனம் மணங்கமழ அரைக்கப்படுகின்றது.

காதலர்களின் மார்புகளில் இச்சந்தனக் குழம்புகளைத் தான் நாம் காணுகின்றோம். கிழக்கும் மேற்கும் இப்போது நீக்கப்பட்டு வடக்குந் தெற்கும் கையாளப் படுகின்றன என்று புலவர் கூறுவதில்தான் எவ்வளவு அழகு! எதிர் மூலைகள் ஒன்றையொன்று இழுக்கின்றன போலும்!

> " குடதிசை மருங்கின் வெள்அயிர் தன்னொடு
> குணதிசை மருங்கின் கார்அகில் துறந்து
> வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்து
> தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக"

[குடதிசை: மேற்கு. குணதிசை: கிழக்கு. அயிர்: ஓர்புகைப் பொருள், கேழ்வட்டம்; உறுதியுடைய சந்தனக்கல். மறுக: குழைய]

தாமரை மலர்களும், தளிர்களும், கருங்குவளைப் பூக்களும், கழுநீர் மலர்களும், பச்சிலை என்னும் ஒருவகைத் தளிரும் சேர்த்துக் கட்டப்பட்ட, கதம்பமாலைகள் காதலர்களின் மார்புகளில் கிடந்து புரளுகின்றன. வெய்யிலின் வெப்பம் நீங்க இன்னும் என்னென்னவோ பொருள்களை இவர்கள் கையாளுகின்றனர்.

வெய்யில் எரிக்கும் நடுப்பகலிலும் தொட்டாற் 'சில்' லென்று குளிர்ச்சி யூட்டும் தென்கடல் முத்துகள் இக்கூட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றன. ஒவ்வொருவர் கழுத்திலும் பருத்துத் திரண்ட முத்து மாலைகளைப் பார்க்கின்றோம். படுக்கைகளில் மணப் பொருள்கள் பலவற்றையும் கூட்டிச் செய்யப்பட்ட சுண்ணங்கள் தூவப்பட்டிருக்கின்றன. மலர்கள் படுக்கை முழுவதும் பரப்பப்பட்டிருக்கின்றன. இவ்வேளையில் காதல் இன்பத்தை மேலும் மேலும் தூண்டிவிடத் தக்க தென்றல் மெல்லெனத் தவழ்ந்து காதலர்களைத் தழுவுகின்றது.

மட்டற்ற இன்பத்தில் மகிழ்ந்து நிலைகொள்ளாது மயங்கித் துவளும் காதலிகள் தங்கள் உயிர்போன்ற கணவர்களின் மார்புகளில் தம்மை ஒப்படைத்துக் கவலையில்லாமல் களிப்புடன் துயிலுகின்றார்கள். உடல் உயிர் யாவும் காதலர்களுக்கே உரிமையாக்கிய பின்பு அவர்கள் ஏன் கவலைப் படப்போகின்றார்கள்? கவலையில்லாமல் தூங்கும் கன்னியர் இன்று எத்தனைபேர்! என்று கவலையோடு ஓர் பெருமூச்சு விடுகின்றோம் நாம்.

கலவிப் போரினால் இளைத்த காதலிகள் விரைவில் தூக்கத்தில் ஈடுபடுவதைக் காட்டும் படம் கண்ணைவிட்டு அகலாமல் அல்லவா நிற்கின்றது!

"ஆவிஅம் கொழுநர் அகலத்து ஒடுங்கிக்
காவிஅங் கண்ணார் களித்துயில் எய்த"

[ஆவி : உயிர்போன்ற. அகலம் : மார்பு. காவி அங்கண்ணார் : நீலமலர் போன்றகண்களையுடைய பெண்கள். துயில் : தூக்கம்]

மாதவியையும் கோவலனையும் நாம் மறந்தே போய் விட்டோம். மேற்காட்டிய காதலர்களின்நிலைதான் இவர்கள் நிலையும். வானமளாவிய மாதவியின் மாளிகையின் மேல், நிலா முற்றத்தில் அழகான பவளக்கால்கள் நாட்டிய ஓர் கட்டில். கட்டில் பரவிக்கிடக்கும் பலவித பூக்கள். கணிகையர் வீடென்றால் கேட்கவா வேண்டும்!

மல்லிகையும் முல்லையும் ஓர் புறத்தில் மலர்ந்து மணத்தைப் பரப்புகின்றன. காதல் இன்பத்திற்கேற்ற பலவகைக் கருவிகளும், பொருள்களும் அங்குக்காட்சி தருகின்றன. அறிவை மயக்கும் அணிகலன்களை அழகாக அணிந்த மாதவி கோவலனை எதிர்

கொண்டழைக்கின்றுள். இருவரும் ஊடியும் கூடியும், இன்பம் நுகர்ந்து மகிழ்கின்றனர். கலவியிற் களித்தும், புலவியிற் புலந்தும் காதலர்கள் களிப்புக் கடலில் மூழ்கிக் கிடக்கும் அதே இரவில் மற்ருேர் காட்சியையும் நாம் காண்போம்.

இன்பத்தின் பக்கத்தில் துன்பம். இளமையின் எதிரில் முதுமை. பகலை அடுத்து இரவு. இதுதான் உலக இயற்கை. உலகம் உருண்டோடுகின்றதென்று பெரியோர் கூறுவதும் இதையேதான்.

முன் நாம் கண்டதற்கு நேர்மாருன ஓர் காட்சி கண்முன் வருகின்றது. காதலர்களைப் பிரிந்த காதலிகளையும் காண வேண்டி வருகின்றது. துன்பங்கள் எல்லாம் திரண்டு உருண்டு ஓர் வடிவங் கொண்டதைப் போலத் தோன்றுகின்ருர்கள் இவர்கள். இவர்கள் விடும் பெருமூச்சுக்களில் எவ்வளவு வெம்மை! அக்காற்றுப் படுவதால் மலர்கள் கூடக் கருகுகின்றன. கொல்லனது ஊதுலைக் களத்தில் சுழற்றும் துருத்தியிலிருந்து "பூத் பூத்" எனக் கிளம்பிப் பொறிகளை வீசும் காற்றுப்போல இருக்கின்றதாம் காதலர்களைப் பிரிந்த அம்மடமாதர்கள் விடும் மூச்சுகள்.

இவ்வளவு காற்று வெளிவருமானல் அவர்கள் உயிர் கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்து குறைந்து விடும் அல்லவா கண்ணுடியில் ஊதப்பட்ட நீராவியைப்போல. ஆதலால் அவர்கள் சோர்ந்து ஒடுங்கி, ஒரு பக்கத்தில் துவண்டு வாடிய மலர்மாலை போன்று கிடக்கின்ருர்கள்.

வெப்பம் பொங்கும் அவ்வெனிற் காலத்தில் நிலம் மிகவும் வெம்மையாக இருப்பது இயற்கை. தரையில் படுப்பது தீமையை உண்டாக்கும் என்பதையும் மறந்து கிடக்கின்ருர்கள் அவர்கள். உள்ளே இருக்கும் வெம்மையை விடவா இவ்வெப்பம் தீமையை உண்டாக்க முடியும்! அவர்கள் உடலும் உள்ளமுந்தான் வெந்து பொங்குகின்றனவே! படுக்கைகள் எல்லாம் கேட்பாரற்று வெறுமையாய்க் கிடக்கின்றன. துன்பத்தின் முடிந்த எல்லையாக விளங்கும் இப் பெண்களைத் தனது புலமை ஓவியத்தில் புலவர் காட்டும் அழகே அழகு!

" காதலர்ப் பிரிந்த மாதர் நோதக
ஊதுஉலைக் குருகின் உயிர்த்தனர் ஒடுங்கி
வேனிற் பள்ளி மேவாது கழிந்து." .

[நோதக: வருந்த. ஊது உலைக்குருகின்: உலைக்களத்தில் உள்ள துருத்தியைப் போல. உயிர்த்தனர்: பெருமூச்சுவிட்டு. மேவாது கழிந்து: படுக்காமல் ஒழிந்து]

தென்றல் இவ் வேளையில் வந்துவிடுமானால் மிக வருத்தம் உண்டாகச் செய்து வாட்டுமே என்ற அச்சத்தால் பலகணியின் கதவுகள் அடைபட்டுக் கிடக்கின்றன. உள்ளே மட்டுமல்லாமல் இப்போது வெளியிலும் புழுங்குகின்றது. இதுவரையிலும் தென் கடல் முத்துகள் அவ்வழகிகளின் மார்புகளை விட்டுப் பிரிந்ததில்லையாம்: அதனையே தம் இடமாகக்கொண்டு வாழ்ந்த அம் மணி மாலைகள் தனியே கழற்றி எறியப்பட்டதால் அவைகளும் வருத்தத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. தென் மலையில் பிறந்து மணங்கமழுஞ் சந்தனக் குழம்புகள் தட்டுகளிலேயே நின்று வாடித்தவிக்கின்றன. முத்துகளைக் காட்டிலும் இம் மணக் கலவைகளுக்குத்தான் அதிக வருத்தம் இருக்கவேண்டும். முத்து மாலைகளாவது இன்று அணியாவிட்டாலும் நாளை அணியப்படலாம். ஆனால் சந்தனத்தின் நிலை அதுவன்று. தான் இன்று ஏற்கப் படா விட்டால் நாளைக்குப் புலர்ந்தல்லவா போகும். உலகத்திலேயே எங்கும் கிடைக்காத இவ் வுயர்ந்த பொருள்கள் வேண்டுவாரின்றி நிலைவேறுபட்டுக் கிடக்கின்றன. இவற்றைப்போலவே நாள்தோறும் தாங்கள் சேரவேண்டிய படுக்கையை இப்போது சேர முடியவில்லை என்று மண மலர்கள் வாடி வருந்துகின்றன. அடடா! காதலிகளைக் காண்பதைவிட இவற்றைக் காணும் போதல்லவா நம் வருத்தமும் மிகுகின்றது.

> "கூதிர்ப் பள்ளி குறுங்கண் அடைத்து
> மலையத்து ஆரமும் மணிமுத்து ஆரமும்
> அலர்முலை ஆகத்து அடையாது வருந்த
> தாழிக் குவளையொடு தண்செங் கழுநீர்
> வீழ்பூஞ் சேக்கை மேவாது கழிய"

[கூதிர்ப்பள்ளி: குளிர் காலத்திற் கென்று அமைந்த இடம். மலையத்து ஆரம்: பொதியமலைச் சந்தனம். முத்து ஆரம்: முத்துமாலை. ஆகம்: மார்பு. தாழிக் குவளை: தொட்டியில் உள்ள நீலமலர். வீழ்பூஞ் சேக்கை: தாம் விரும்பிய அழகிய படுக்கையில்.]

கயல்மீன் போன்ற காதலியரின் கண்கள் கலகலவெனக் கண்ணீர்த்துளிகளைப் பொழிகின்றன. தங்குதடை யில்லாமல் புரண்டு ஓடும் நீரைத் தடுக்க அக்கண்களால் இயலவில்லை. அவ்வளவு வருத்தம் அவைகளுக்கு! அவை அவ்வாறு வருத்தப் படத் தகுந்த காரணம் உண்டு. முன்பு காதலர்கள் கூடியிருந்த காலங்களில் காதலிகளை விட மிகவும் மகிழ்ச்சியடைந்தவை அக் கண்கள் தாம். அவை செய்த குறும்புகள், அப்பப்பா! யாரால் சொல்ல இயலும்!

இந் நிலையைக் காதலர்கள் காண்பார்களாயின் உயிரையே அல்லவா விட்டு விடுவார்கள்! அவர்கள்தான் பக்கத்தில் இல்லையே; அதுவரையிலும் நல்லதுதான். ஆனால், மீண்டு வந்து இச் செய்தியைக் கேட்கும்போது அவர்கள் உள்ளம் எவ்வளவு துடிதுடிக்கும்!

கண்ணகியின் துன்பம் எல்லாவற்றையும் கடந்து நிற்கின்றது. ஒன்றிரண்டு நாட்கள் காதலர்களைப் பிரிந்த காதலியர் நிலையே இப்படி இருக்குமானால் பல திங்கள்களாகத் தன் அழகிய இளமை குன்றாத—ஆருயிர்க் காதலனைப் பரத்தையினிடம் பறிகொடுத்த அவள் நிலை எவ்வாறு இருக்கும்!

அவளுடைய சிவந்த—அழகிய அடிகளில், இப்போது சிலம்புகளைக் காணவில்லை. சிலம்புகள் அணியவேண்டும் என்ற எண்ணத்தையே அக் கால்கள் கைவிட்டு விட்டனவாம். என்ன இரங்கத்தக்கநிலை!

"அம்செம் சீறடி அணிச்சிலம்பு ஒழிய"

[அம்செம் சீறடி: அழகிய சிவந்த சிறிய அடிகள்.]

காதற் கணவன் அளித்த சில மங்கலப் பொருள்களையன்றி மற்றைய எவ்வித மணப் பொருள்களையோ, ஆடை அணிகளையோ அவள் அணியக் கருதவில்லை. அணிந்தாலும் அவை மகிழ்ச்சி தருவதில்லை. மகிழ்ச்சி தராதது மட்டுமல்ல; வெறுப்பையும் ஊட்டின அவை. காதுகள் ஓலை என்னும் அணியை அறவே ஒழித்தன. இனி ஒரு காலத்தில் அதை அணிவோம் என்ற நம்பிக்கைகூடக் கிடையாது அவைகளுக்கு.

திங்களைப்போன்ற அழகிய முகத்தில் கோவலனுடன் கூடி மகிழும்போது சிறு வியர்வைத் துளிகள் அடிக்கடித் தோன்றுமல்லவா! அவையெல்லாம் பழங் கதைகள். நினைப்பதற்கே நெஞ்சில் வேல் பாய்ச்சும் நிகழ்ச்சிகளாய் மாறிவிட்டன இப்போது. செங்கெண்டை போன்ற கண்கள் மை தீட்டிக் கொள்வதே இல்லை. ஏன்! அச் செயலையே அவை மறந்து நீண்ட நாட்களாகிவிட்டன.

"மங்கல அணியிற் பிறிதுஅணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரிய
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப"

[மங்கல அணி: மணப் பொருள்கள். கொடுங்குழை: வளைந்தகாதணி. வீழ்: தொங்குகின்ற. வாள்முகம்: ஒளிபொருந்திய முகம். கயல்: கெண்டைமீன். அஞ்சனம்: மை.]

பவழம் போலச் சிவந்த அந்த அழகிய நெற்றியில் தீட்டப்படும் திலகத்தைக் காணமுடியவில்லை. கண்ணகியின் புன்முறுவல் உலகப் புகழ் பெற்றிருக்கிறது. அப் புன்முறுவல் ஒன்றிற்காக உடல், பொருள், உயிர் என்னும் இவற்றை மட்டுமல்ல, கடல்சூழ்ந்த உலகம் முழுவதையும் கூடக் காணிக்கையாகத் தரக் காத்துக் கிடந்தான் கோவலன். அப் புன்னகை இப்போது எங்கோ சென்று ஒளித்துக்கொண்டது. அதில் தன் உயிரையே ஈடு

படுத்தியிருந்த கோவலன் இப்போது அதனை இழந்தும்கூட உயிருடன் வாழ்வது என்ன புதுமை !

கூந்தல் குலைந்து கிடக்கின்றது. எண்ணெய் கண்டு அவை எத்தனை நாட்கள் ஆயினவோ ! மலர்கள் அணியும்வகை கூடக் கண்ணகிக்கு மறந்துபோயிருக்கவேண்டும். இவ்வளவு புழுதியில் புரண்டும் கருமை குன்றாத கூந்தல் காண்பவர்கள் உள்ளத்தில் எவ்வளவு எண்ண அலைகளை எழுப்பி விடுகின்றது. இதோ இந்தச் சித்திரம்;—

"பவள வாள்நுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி"

[பவளவாள்நுதல் : பவளம்போன்ற ஒளி பொருந்திய நெற்றி. திலகம் : கலைப்பொட்டு. தவளம் : முத்து. மை இரும் : மைபோன்று கருத்த. நெய் அணி : எண்ணெய் தடவுதல். கையறு : செயல் அற்ற.]

இருளும் ஒளியும் மாறிமாறித் திகழும் இவ்விரவு இவ்வாறு கழிகின்றது.

★ விவேகிகளாக இருந்தால் ★

இந்தி புகுத்தும் திட்டத்திஞல் மக்களிடை மனக்கொதிப்பு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. பார்க்கக் கண்களும் கேட்கச்செவிகளும் படைத்தவர்களாக நமது மந்திரிமார்கள் இருப்பின், அந்த எதிர்ப்பு எவ்வளவு பிரம்மாண்டமான உருவுடன் இருக்கிறதென்பதை அறிவர்.

அவர்கள் விவேகிகளாக இருந்தால், வங்காளத்திலே பிரிவினை காரணமாக எவ்வளவு தொந்தரவு நேரிட்டதோ அவ்வளவு தொல்லைகள் இந்தி காரணமாக இந்த மாகாணத்தில் ஏற்படும் என்று நாம் எச்சரிக்கை செய்வதை ஏற்று நடப்பர்.

27-2-38ல் — காஞ்சிபுரத்தில்

இந்தி எதிர்ப்பாளர் — மாநாட்டில்

சர். கூர்ம வெங்கட்ட ரெட்டி நாயுடு

அவர்களின் தலைமையுரை.

தொடர் கதை :

[முன்பு:—மாதவனும் மூர்த்தியும் ஒரு நாள் மாலை உலாவச் செல்கிறார்கள். மாந்தோப்பில் இலக்கியப்பித்தனைச் சந்தித்து, அவன் தந்த "பொற்சிலை" என்ற கையெழுத்துச் சுவடியைப் பெற்றுக்கொண்டு, வீட்டிற்கு வந்து வாசிக்கிறார்கள்.

இலக்கியப்பித்தன் காட்டில் இருக்கும் பொழுது பொற்சிலை என்றொரு அழகிய கன்னியைச் சந்திக்கிறான். ஆத்திரத்தோடு ஆரம்பத்தில் பேசியவள், முடிவில் இசைந்து அவனது அணைப்பில் சாய்கிறாள். அவளோடு, அவளது குகை இல்லத்திற்குச் செல்கிறான். சீர்திருத்த நோக்கங்கொண்ட பொற்சிலையின் தாத்தாவின் புரட்சிகரமான பேச்சு, அவனது உள்ளத்தைக் கவர்கிறது. பிறகு............]

நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. என் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பமே எனக்கு உண்டாகவில்லை.

இடை அசைய, வளை ஒலிக்க, புன்னகை சிந்த, கரு விழிகள் என் இதயத்தில் ஆசைக் கனல் எழுப்ப, அருகே வந்து "சொல் அத்தான், என்ன வேண்டும்?" என்று கேட்க எழில் மிக்க பொற்சிலை என் பக்கமிருக்க, ஊரைப்பற்றிய நினைவு வருமா?

"தம்பி! தமிழர்கள் நிலை கெட்டவர்கள்! தங்கள் செல்வத்தை வைத்துக் காப்பாற்ற வகையற்றவர்கள்! கடவுள் என்ற பெயரால் எத்தகைய புளுகுகளைக் கட்டிவிட்ட போதிலும் அத்தனைக்கும் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் கயமை மிக்கவர்கள்!........." இப்படிப்பட்ட அறிவு செறிந்த அரிய கருத்துக்களை வாரிவாரி வீச, நடமாடும் களஞ்சியம் அக்கிழப் பெரியார் அருகிலிருக்க, ஊரின் கவலை எழுமா?

ஊரைப்பற்றிய கவலை ஏன் எனக்கு எழ வேண்டும்? நான் வரவில்லையே என்று கவலைப்பட ஒரு உயிரேது அங்கு?

பாலூட்டித் தாலாட்டி, பரிவோடு வளர்த்த என் தாய் இருக்கின்றாளா? நான் படித்து

அறிஞனாய், உலகோர் மதிக்கும் ஓர் உத்தமனாய், விளங்கவேண்டுமென்று கனவுகள் கண்டு வந்த என் தந்தை இருக்கிறாரா? அய்யோ! தாய் இல்லை, தந்தை இல்லை, உடன் பிறந்தோர் ஒருவரும் இல்லை! யாருமற்ற தனிமரம் நான். ஆனால் பொருள் நிறைய இருக்கிறது. பாண்டிய மன்னனின் அரண்மனையைப் போல, பெரிய வீடு இருக்கிறது. அறிவு எனும் சோறு உண்டு, ஆராய்ச்சி எனும் கனிரசம் பருகி தெளிவு எனும் இன்ப நிலையடைய பெரிய நூல் நிலையம் இருக்கிறது. நன்செய் புன்செய், தோப்புத் துறவு சகலமும் உண்டு! எவை இருந்து என்ன பயன்? என் சுக துக்கத்தில் பங்கெடுத்துக்கொள்ள ஒரு உயிருமில்லையே அங்கு!

அன்று ஏனோ இதுபோன்ற எண்ணங்கள் பற்பல என் மனதில் தோன்றின. இந் நினைவுகள் கண்களைக் கலங்கச் செய்தன. சிறு குழந்தையைப்போல் அழவே தொடங்கிவிட்டேன்.

தனித்து நான் இருக்கக் கண்ட பொற்சிலை, காதலெனும் இன்பக் கேணியில் நீந்தி விளையாடி களிப்பின் எல்லையைக் காணத் தக்க சமயம் இதுதான் என்றெண்ணி, என் அருகில் வந்தாள். நான் அழுதுகொண்டிருப்பதைக் கண்டதும் அவள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. சோகத்தால் அவள் முகம் வாடியது.

"அத்தான், என்ன நேர்ந்தது?" என்றாள் பயம் நிறைந்த குரலில். கண்களைத் துடைத்துக்கொண்டு மௌனமாக இருந்தேன்.

"தங்கள் உள்ளம் நோகும்படி தாத்தா ஏதாகிலும் கூறினாரா? அல்லது நானாகிலும் என்னையும் அறியாமல் தவறு ஏதேனும் செய்து விட்டேனா?... ஏன் அத்தான் பேசாமல் இருக்கிறீர்?......வாய் திறந்து பேசுங்கள், அத்தான்!" என்று என் தோள்களைப் பிடித்து ஆட்டினாள். அவள் கண்களினின்றும் நீர் முத்துக்கள் உருண்டன.

"கண்ணே! நீ ஏன் வீணாக கவலைபடுகிறாய்? எனக்கு யாராலும் எவ்விதத் தொல்லையும் ஏற்படவில்லை" என்று கூறிக்கொண்டே, அன்பாக அவளது கண்களைத் துடைத்தேன்.

"பின் ஏன் கண் கலங்கி உட்கார்ந்திருக்கிறீர்?"

"என் பெற்றோரின் நினைவு வந்தது, ஆகவே என் மனம் வேதனை அடைந்தது."

"பெற்றோரின் நினைவா?"

"ஆமாம்!"

"அப்படியானால் ஊருக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை பிறந்து விட்டது என்கிறீரா?"

"இல்லை! உயிரோடு என் ஆசை அன்னையும், அன்பு தந்தையும் இல்லை!"

"என்ன?"

"ஆமாம் கண்ணே! உன் நிலைதான், என் நிலையும்!"

"எப்படி இறந்தார்கள்?"

"அவர்கள் திடீர் மரணம் அடையவில்லை. இயற்கையின் முறைப்படிதான் இறந்தார்கள்!"

பொற்சிலையின் கண்கள் வற்றா ஊற்றாயின. நானும் அழுதேன், அவளும் அழுதாள்.

"என் தாய் கொல்லப்பட்டாள்! என் தந்தை தற்கொலை செய்து கொண்டார்! என்று அன்றொரு நாள் கூறினேன் அல்லவா அத்தான்? அந்த வரலாற்றை இன்று தங்களிடம் கூற வேண்டுமென்று என் மனம் துடிக்கிறது......"

"அன்பே! அதனைக் கூறுவதால் உன் மனம் மேலும் வருத்தமடையாது என்றால் தாராளமாகக் கூறு. எனக்கும் அறிய வேண்டுமென்ற விருப்பந்தான்."

"மனதில் சுழன்று கொண்டிருக்கும் கவலையை அன்பு கொண்டவர்களிடம் கூறினால், அக்கவலை சிறிது குறையும் அல்லவா?"

"உண்மைதான்."

கருப்பு நிற சேலையின் நுனியினால் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, தன் பெற்றோரின் வரலாற்றைப் பொற்சிலை கூற ஆரம்பித்தாள்.

"அந்தச் சோக நிகழ்ச்சி நடைபெற்ற பொழுது, நான் பத்து மாதக் குழந்தையாம்! இந்த வரலாற்றைப் பல நாட்கள் சோக மிகுதியினால் என் தாத்தா சொல்லமுடியாமல் தவித்தார். பிறகு ஒருநாள், அதனை அறிய எனக்கிருந்த மிகுந்த ஆவலை அறிந்து, வேதனையையும் பொறுத்துக் கொண்டு வெளியிட்டார். அன்று அவர் கூறியதை இன்று தங்களுக்குச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

"என் தாயின் பெயர் **பொற்கொடி!** என் தந்தையின் பெயர் **சிலைமன்னன்!** என் அன்னை நல்ல அழகி. என் தாத்தாவின் ஒரே மகள். ஆகவே உயிரைத் தன் மகள் மேல் வைத்து வளர்த்து வந்தார். ஆனால் அவர் அறியார், தன் மகளின் முடிவு இப்படியாகுமென்று..................."

பொற்சிலையின் கண்களில் திரும்பவும் நீர்த்துளிகள் புறப்பட்டன. அவற்றை நான் துடைத்தேன். வரலாற்றைத் தொடர்ந்து கூறலானாள்.........
....

பொற்சிலையைப் பெற்ற பொற்கொடி, சிறு பெண்ணாக இருந்த பொழுது மான் குட்டியைப்போல் துள்ளி விளையாடுவாள். சிட்டுக் குருவியைப் போல் பறந்து விளையாடும் தன் மகள், காட்டில் எங்கேயாகிலும் ஓடிவிடப் போகிறாள் என்று பயந்த கிழவர், எப்பொழுதும் அவளைத் தன் அருகிலேயே வைத்திருந்தார்.

பொற்கொடி, ஆண்டுகள் உருண்டதில், இதழ் விரிந்து மணம் வீசும் மலரானாள்!

பொற்கொடி சிறுமியாக இருந்த போது, ஜோடிப்புறாக்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டால், கைதட்டி ஓசை செய்து அவைகள் பயந்து சிறகடித்துப் பறந்தோடுவதைக் கண்டு, கலகலவென சிரித்து மகிழ்வாள். குமரியான பிறகு, குந்தியிருக்கும் ஜோடிப் புறாவைக் கண்டால், அதட்டித் துறத்த மாட்டாட்டாள். அலகோடு அலகு தேய்த்து அவை மகிழ்வதைக் கண்டு, தானும் மகிழ்ச்சி அடைவாள். அம் மகிழ்ச்சி சிறிது நேரத்தில் மங்கி விடும். அந்தப் புறாக்களிருக்கும் இன்ப நிலையில் தானிருக்க வாய்ப்பில்லையே என்றெண்ணி அவள் உள்ளம் வருந்தும்.

மாமரத்தைச் சேர்த்தணைத்துப் படர்ந்திருந்தது முல்லைக் கொடி! அதனைக் காண்பாள், பெருமூச்செறிவாள். காற்றில் நடனம் செய்யும் அழகிய நறுமலரைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிட்டு, பிறகு அதன்மீது மெதுவாக அமர்ந்து, தேனை மொண்டுக் குடிக்கும் வண்டு!

வேல் விழிகள் அக்காட்சியைக் கண்டு ரசித்துக்கொண்டிருக்க; காணாதே, கண்ட பிறகு உள்ளம் நோகாதே என்று கூறி, கால்கள் வேறு பக்கம் அவளை இழுத்துச் செல்லும்! இந்த மன நிலையில் இளங்குமரியின் நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன!

ஒரு நாள் பொற்கொடி, காட்டில் மலர் கொய்து கொண்டிருந்தாள். அவளுக்குச் சிறிது தூரத்தில் கல் உடைக்கும் சப்தம் கேட்கவே, அத் திக்கு நோக்கி நடந்தாள். செடியின் மறைவில் ஒளிந்துகொண்டு, கல்லுடைப்போரை உற்றுப் பார்த்தாள். பத்து பேருக்கு மேல் ஒரு பாறையைப் பிளந்து கொண்டிருந்தார்கள். புதியதாகக் கட்டப்பட்ட ஒரு சிறிய குடிசை அங்குக் காணப்பட்டது. அக்குடிசையின் அருகில், பெருத்த தோள்களையும் ஒளி வீசும் கண்களையும் கொண்ட ஓர் இளைஞன் நின்றுகொண்டிருந்தான்.

மறைந்திருந்து அவனைக் காண்பதில், ஓர்வித இன்ப ஊற்று அவள் உள்ளத்தில் கசிவதாக பொற்கொடிக்குத் தோன்றியது. அவ்விடத்தை விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாமல் தன் குகை இல்லத்திற்குச் சென்றாள். மறுநாளும் அவ்விடத்திற்கு வந்தாள், அதே காட்சியைக் கண்டு களித்தாள். தினந்தினம் அங்கு வருவது, மறைந்திருந்து வாலிபனின் பரந்த மார்பைக் கண்டு, பொன்னுடலின் ஒவ்வொரு அணுவிலும் துடிதுடிப்பை ஏற்றிக் கொண்டு வீடு திரும்புவது— இது வழக்கமாயிற்று!

மறைந்திருந்து கள்ளத்தனமாக காளையின் அழகைச்

சுவைத்துக்கொண்டிருந்த கன்னியின் கண்களும், இப்படி உடை, அப்படி உடை என்று கல் உடைப்போருக்கு ஆணையிட்டுக் கொண்டிருந்த சிலை மன்னனின் கண்களும் ஒரு நாள் தற்செயலாகச் சந்தித்து விட்டன!

சிலை மன்னன் தன்னைப் பார்த்து விட்டான், தன் கள்ளச் செயலைக் கண்டுபிடித்துவிட்டான், என்பதை அறிந்ததும் அவள் உள்ளத்தில் மின்னல் புகுந்தது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. மெல்ல அவ்விடத்தை விட்டு அகல ஆரம்பித்தாள். சிற்றிடையாளின் அழகில் மயங்கிய சிலைமன்னன், அவளைப் பின் தொடர்ந்தான். நடந்து கொண்டிருந்த பொற்கொடி திரும்பிப் பார்த்தாள். அவன் பின் தொடர்வதைக் கண்டதும் அவள் உள்ளம் படபடவென அடித்துக்கொண்டது. அந்தப் படபடப்பிலும் ஒருவித இன்பமிருப்பதாக அவள் உணர்ந்தாள்.

காட்டில் ஒரு பெண் தனித்திருக்கிறாள், அதிலும் நல்ல அழகி, என்பதை அறிந்ததும் அவளிடம் பேசவேண்டுமென்ற ஆசை நொடிக்குநொடி சிலை மன்னனின் உள்ளத்தில் அதிகரித்தது. ஆகவே சிறிது வேகமாகவே நடந்தான்.

அவன் உடலோடு உடலாகி, பீறிட்டுச் சுரக்கும் புது இன்பத்தில் மெய் மறக்க வேண்டுமென்று அவள் உள்ளம் துடிதுடித்தபோதிலும், இயற்கையாக பெண்களுக்கு ஏற்படும் அச்சமும் நாணமும் அவளை அதி வேகமாக நடக்கத் தூண்டின!

அவள் தன்னை விரும்பவில்லை ஆகவேதான் அவ்வளவு வேகமாகச் செல்கிறாள், விரும்பாத பெண்ணைப் பின் தொடர்வது விவேகமல்ல என்றெண்ணி சிலை மன்னன் சோர்ந்து நின்றுவிட்டான்.

இல்லம் அடைந்தபின்னர் தான் செய்த தவற்றையும், நாடிவந்த இன்பத்தை நழுவ விட்டதையும், உணர்ந்து இளம் பெண் வருந்தினாள். அறியாமையினால் இன்று தட்டிவிட்ட இன்பம் நாளை கிடைக்காமலாப் போய் விடப்போகிறது என்று நினைத்துத் தனக்குத்தானே ஆறுதல் அடைந்தாள்.

மறு நாள் காட்டினுள் நுழைந்து செல்லும் போதே, அவளுக்கு என்றுமே தோன்றாத களிப்புந் தோன்றியது. சிறிது தூரம் சென்றதும் தயங்கி நின்றாள். காதுகளைக் கைகளால் மடக்கிக் கொண்டு, நுணுக்கமாகக் அத் திக்கு நோக்கிக் கேட்டாள். கல் உடைக்கும் சப்தம் அவளுக்குக் கேட்கவில்லை. கூர்மையாக கவனித்தாள்! கேட்கவே இல்லை! வேகமாக அவ்விடத்திற்குச் சென்றாள். ஏமாற்றம்! பெருத்த ஏமாற்றம்! அங்கு யாருமே

காணப்படவில்லை. சிறிய குடிசையும் காணோம்!

உவகை மறைந்தது, அவள் உள்ளம் சுருங்கியது, உடல் தளர்ந்தது! நாட்கள் ஓடின! சிலைமன்னனை எண்ணி எண்ணி ஏங்கினாள். நாளுக்கு நாள் அவள் உடல் இளைக்கத் தலைப்பட்டது. மகளுக்கு நோய் என்று கருதிவிட்ட கிழவர் பற்பல மூலிகைகளைக் கொடுத்தார். முல்லைக் கொடியாளின் உடலை வாட்டும் நோய், மூலிகையினால் போக்கக்கூடிய நோய் அல்ல என்பதை அப்பெரியார் அறியார்!

வெகு நாட்களுக்குப் பிறகு, வேதனையைச் சிறிது மறந்திருக்கலாமென்று, இயற்கையின் அழகைக்காணக் காட்டினுள் சென்றாள் பொற்கொடி. அவள் காதுகளை அவளால் நம்ப முடியவில்லை! அத்திசை நோக்கிப் பறந்தாள். பலர் கல் உடைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் அருகில், பாராண்ட பாண்டிய மன்னனைப் போல கெம்பீரமாக சிலைமன்னன் நின்று கொண்டிருந்தான்! இது கனவோ என்றெண்ணி கண்களைக் கசக்கிக்கொண்டு மறுபடியும் பார்த்தாள். கனவல்ல உண்மை, முழு உண்மை, என்பதை அறிந்ததும், அவள் இள உள்ளம், பெண்உள்ளம் மகிழ்ச்சியினால் துள்ளியது. அவனைத்தானே அழைத்துப் பேசலாமா என்று கூட அவள் எண்ணினாள். அதற்குள் அவனே தன்னை நாடி வருவதைக் கண்டதும் தலை தாழ்த்தி மெதுவாக அவ்விடத்தைவிட்டு நகரத் தொடங்கினாள். அருகில் வந்தான்!

முகம் நிமிர்ந்து நாணத்தோடு அவனைப் பார்த்தாள்! அவனும் பார்த்தான்! அந்த சந்திப்பில் இருவருக்கும் ஒரு வித மயக்கம், இன்பம்! கதிரவன நாள் தவறாது தோன்றுவதைப்போல, அவர்களின் சந்திப்பும் தினம் தவறாது நடைபெற்றுவந்தது.

ஒரு நாள் மாலை! ஆற்றங்கரையோரம்! விழுதுகள் சரம் சரமாக தொங்கிக்கொண்டிருந்த ஆலமரத்தடியில் இளங் காதலர் கூடினர். இன்பமாக பேசிக் களித்தனர். காதல் மது உண்ட மயக்கத்தில் சிலைமன்னனின் பரந்த மார்பில் சாய்ந்தாள் பொற்கொடி! இளங் காதலர் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்ததை, மூலிகை பறிக்க அப்பக்கம் வந்த கிழவர் பார்த்துவிட்டார். அவர் கண்கள் கோபத்தால் சிவந்தன!

(தொடரும்)

அவள்?

சரசா நாதன்

"என்ன ஸார் எப்பொழுது பார்த்தாலும் ஜன்னலருகில் நின்றுகொண்டு யாரையோ பார்க்கிறமாதிரி தெரிகின்றதே! நானும் விடாது கவனிக்கின்றேன். எந்நேரமும் நீங்கள் ஏதோ ஒன்றைத் தேடுவது போலவே சாலையில் போய் வருபவர்களைப் பார்க்கின்றீர்களே" என்று கமலி சற்றுக் கிண்டலாகவும் மிரட்டலுடனும் என்னைக் கேட்டாள். ஜன்னலிலிருந்து திரும்பியபடியே "ஆம் கமலி" இவ்வழியில், ஏன்? இவ்வுலகிலே கூட எத்தனையோ ஜீவன்கள் வருகின்றன, ஆனால் நான் பார்க்கும் அல்லது எதிர்பார்த்து நிற்கும் ஜீவனைக் காணவில்லை. காண்பேனா? இது தான் என் கேள்வி. விடை தேடுகின்றேன். அளிப்பவர் யாருமில்லை.

"என்ன ஸார்! அவ்வளவு உருக்கமுடன் தாங்கள் எதிர்பார்க்கும் மனிதர் பெயரோ தெரியாது. ஊரோ அதுவும் தெரியாது என்கிறீர். பின்னர் எப்படித்தான் இம்மனிதர் உங்களுக்குத் தோழரானார்? ஸார், இதோ பாருங்கள் நான் ஒரு பெண். சேவைக்கென்றே இறங்கியவள். என்னாலானதைத் தங்களுக்குச் செய்கின்றேன். தயவுசெய்து நீங்கள் அவ்விசித்திர ஜீவனைச் சந்தித்த விதமாகிலும் சொல்லுங்கள். நான் எப்படியோ ஊகித்துக் கொள்கிறேன். அதற்குமேல் முடிந்ததைச் செய்யலாம். துன்பத்தைப் பிறரிடம் சொன்னால் அது குறையுமென்றும், இன்பத்தைப் பேசினால் நிறையுமென்றும் அறிவாளர் கூறுகின்றனர். அசனால் தாங்கள் தயவுசெய்து" என்று கமலி குறுஞ்சிரிப்புடன் உட்காரும் முன்னரே நான் ஆரம்பித்து விட்டேன்.

மணி மூன்றடித்தது. வெய்யல் தாங்க முடியவில்லை. பாலக்காட்டு ஸ்டேஷனில் நானும் எனது தம்பியும் நண்பன் அருணகிரியும் உட்கார்ந்து கொண்டு இரயிலுக்காகக் காத்திருந்தோம். என் மனம் எதையோ கற்பனை செய்து கொண்டிருந்தது. மனம் நிம்மதியில்லாமல் அலைமோதிக் கொண்டிருந்தது. லேசாகக் காற்று வீசிக் கொண்டிருந்தாலும் சிறிது வெப்பமும் கலந்திருந்தது. இருந்தாற்போலிருந்து ஒரு இனிய குரல் என் கற்பனைக் கப்பலுக்கு நங்கூரம் மாட்டி நிறுத்திற்று. பாலைவனத்திற் கருகிக் கொண்டிருந்தவன் ஒரு பூஞ்சோலையை அடைந்தது போல் தோன்றிற்று. நான் காண்பது கனவா என்று கண்களைக் கசக்கினேன். இல்லை, உண்மையிலேயே அவர் ஒரு பெண்தான். கட்டான உடலில் அவளது நீலப் பட்டாடை அவளது சிவந்த மேனியைச் சிறப்புறச் சிங்காரித்தது..

சிவந்த மேனிக்கேற்ற கரிய கூந்தற் பின்னல் அவள் இடையையும் தாண்டித் தரையைத் தொட துடிதுடித்துக்கொண்டிருந்தது. சுருக்கமாகச் சொன்னால் சிறந்த அழகி என்றுதான் சொல்லமுடியும். தன் புருவ வில்லை வளைத்துப் பார்வையம்புகளைச் சரமாரியாகப் பொழிந்தாள். ஒவ்வொரு அம்பும் என் மன உறுதியைத் தகர்த்தெறிந்தது என்று, சொல்லவும் வேண்டுமோ? இருந்தாலும் பயனில்லாது போய்விடவில்லை. மறுகணம் மலர்ந்தது, அன்று மலர்ந்த மல்லிகைபோல் புன்முறுவல் பவளவாயினின்றும். எங்களது இன்ப நாடக ஒத்திகையைக் கலைத்தது புகை வண்டியின் வருகைக்குரல். மணியைப் பார்த்தேன். ஒன்றரை மணி நேரம் எவ்வாறு சென்றதோ எனக்கே விளங்கவில்லை. ஆனால் என் தம்பியும் நண்பனும் இடையூறு ஏற்படா வண்ணம் நடந்துகொண்டனர். அதற்காக அவர்களுக்கு வந்தனம்.

வண்டி வந்து விட்டது. அவள் ஏறிய பெட்டியிலேயே நாங்களும் ஏறினோம். அவளுடைய தாயும் தகப்பனும் ஏறிக்கொண்டனர். அதனால் அவளுடன் பேசமுடியாது எனத் தெரிந்தேன். "அவள் பெயர் என்ன? எங்கு இருக்கிறாள்? எங்கு போகின்றாள்? என்று தெரியக்கூட முடியாததுபோல் தோன்றி விட்டது. "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே" என்று நினைத்த பொழுது என் மனம் வெடித்துவிடும்போல் ஆகி விட்டது. எதையோ யோசனை செய்பவன் போல் கீழே குனிந்தேன். மனமும் பேனாவும் ஒத்துழைத்தன. அதனின்றும் தோன்றிற்று ஓர் அழகிய சிறு கடிதம். எவ்வளவு விரைவில் எழுதி முடித்தேனோ அவ்வளவு கடினமாக இருந்தது அதை சேர்ப்பிக்க முயன்றபோது. முயன்றும் பயனில்லை. வண்டியும் ஒலவக்கோடு வந்துவிட்டது. என்னுடன் கோவைக்கோ, அல்லது ஈரோடு மார்க்கத்திலோ வருவாள் என்று எதிர்பார்த்தேன்— ஏமாந்தேன். தயாராகக் காத்திருந்த திருச்சூர் போகும் வண்டியிற் சென்று ஏறினாள். வண்டி ஏறியவள் நீண்ட பெருமூச்சுடன் ஒரு சோகப் பார்வையையே என்னிடம் வீசினாள்! ஆம். அந்தப் பார்வைதான் என்னை ஒரு கைதியாக இந்நிலையில் விட்டுச் சென்றது.

இந்நிலையில் நினைவு தவறி நின்று கொண்டிருந்தேன். அன்றுதான் அன்பின் தன்மையை என்ன என்றுணர்ந்தேன். இரண்டு உள்ளங்கள் ஒன்று கலந்த பார்வையில் சந்தித்ததால் ஏற்படும் அன்பின் ஆழத்தையே நெஞ்சாழம் என்று கூறவேண்டும். கடலின் ஆழத்தையும் அளவிடலாம். நெஞ்சாழத்தை அளவிட நினைக்

கவும் முடியாது. அன்பின் அகண்ட நிலையே காதல். அன்பின் விகாரமே காமம். அன்பின் தன்மையை உணர்ந்து அனுபவித்தவரே அதனை யறிவர். அன்புக்கு வாய்மொழியே வேண்டுவதில்லை. கண்களே அதன் வாய். ஒளியே அதன் மொழி.

அவர்கள் ஏறிய வண்டியிலேயே நானும் சென்று ஏறினேன். தம்பியும் நண்பனும் தடுத்தனர். ஆனால் பயன்படவில்லை அவர்கள் சொற்கள். அவளுடைய பெற்றோர்களுக்கு அப்பொழுதுதான் சிறிது சந்தேகம் உதித்தது. ஆனால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. கூட்டம் அதிகமானபடியால் எல்லோரும் நின்று கொண்டிருந்தனர். அவளுக்குப் பின்னால் அவள் தாயார், முன்னால் தகப்பனார். தகப்பனார் எதற்கோ வண்டியைவிட்டுக் கீழே இறங்கினார். "என்ன செய்கிறோம்!" என்று எனக்கே தெரியாமல் என் கைகள் இக்கடிதத்துடன் அவள் இடையைநாடியது. அச்சிறு கடிதத்தை அவள் ஒட்டியாணத்தில் செருகினேன். மறு நிமிஷம் "ஓ" வென்ற அலறல் கேட்டு அவள் தந்தையார் ஓடி வந்தார். அக் கூச்சல் நகரமுடியாமற் செய்து விட்டது. கையும் அவள் இடையை விட்டு நகரவில்லை. அருகிலிருந்தவர்கள் என்னைத் திருடனென்று பிடித்தனர். ஓடிவந்த அவள் தகப்பனாரின் கண்கள் சிவந்தன. சிவந்ததின் பயன், சிவப்புத்தலையரிடம் சிக்கினேன். கடிதத்தை மறைத்தாள் அவள். கடிதம் மட்டும் வெளிப்பட்டிருந்தால், "திருடன்" என்ற இந்தக் கேவலச் சொல் என்னைப் பாதித்திருக்காது. அந்த ஒரு சொல்லுக்காகவே விடுதலையடைந்த பின்னரும் வெளியே சென்று எப்படியாவது அவளைக் கண்டு அவளையே மணந்து நான் திருடனல்ல என்பதை இப்பைத்தியக்கார உலகிற்கு அறிவிப்பதே என் வாழ்க்கையின் இலட்சியமென அன்றே முடிவு செய்து விட்டேன்.

கடிதத்தை மறைத்த அவளை நான் ஆருயிர்க் காதலி யென்றெடுத்துக் கொள்வதா? அல்லது என் வாழ்க்கையில் ஒரு பெரிய கல்லை யெறிந்த காதகி யென்று அழைப்பதா? அவள் மீது குற்றமில்லை. கடிதத்தை அவள் மறைத்துத்தான் வைத்திருக்கவேண்டும். தந்தையாரை எதிர்த்துப் போராடி அவர் திருடனல்ல, காதற் கடிதம் வரைந்தார். இதோ! என்று கடிதத்தை வீசினால் உலகம் அவளை ஏசும். சமூகம் அவளைப் புறக்கணிக்கும். உற்றார் தூற்றுவர். உறவினர் உதறுவர். இந்த உலகம் காதல் வாழ்க்கையை— காதல் மணத்தைப் போற்றும் உலகமல்ல. பாஞ்சாலிப் பசப்பிகளுக்கும், பாத்தையர் வீடே பரலோகம் எனத் திரியும் பதர்களுக்கும் ஏற்றது.

வண்டியும் நகர்ந்தது. வாழ்நாளும் சிறையிலகப்பட்டது. உடலைத்தான் சிறையில் வைத்தனர். உள்ளத்தைச் சிறைப்படுத்த முடியுமா? நாளுக்கு நாள் என் மனத்திரையில் அவள் உருவம் தளிர்விட்டு ஒளி வீசிக்கொண்டே இருந்தது, எப்படியாவது எங்கு சுற்றியாவது அவளைக் காண வேண்டுமென்ற அவா, என்னைச் சிறையினின்றும் தப்பிக்க வழி தேடச் செய்தது. ஓரிரவு சிறைச்சாலையின் வெளிச் சுவரின் மேல் ஏறினேன். அதன் மீதே சிறிது தூரம் ஓடினேன். அடுத்த விநாடி ஒரு காவலனாற் சுடப்பட்டு கீழே விழுந்தேன். காலில் பலத்த காயம். எப்படியோ ஒரு மாதம் ஆகிவிட்டது. காயத்தை ஆற்ற இந்த ஆஸ்பத்திரிக்கு வந்தேன். உன்னுடைய பராமரிப்பில் இன்று வரையிருந்தேன். நானோ நான் எங்கோ? நீ எங்கோ? என்னவோ கமலி இந்த வார்டிற்கு வந்தது முதல் நீ ஒருத்திதான் என்னிடம் இவ்வளவு பாசமாக இருக்கிறாய். உனக்கு மிகவும் நன்றி" என்று கூறிக்கொண்டே நான் மறுபடியும் ஜன்னலருகில் வந்து நின்றேன். ஜன்னலருகே வந்து நின்று எவ்வளவு நேரம் ஆயிற்றோ தெரியவில்லை. திடீரென்று திரும்பினேன். நான் கண்ட காட்சி என்னையே பிரமிக்கச் செய்துவிட்டது. நான் உட்கார்ந்திருந்த நாற்காலியினருகில் என் பாதத் தாளைகளில் கமலி தலையைக் கவிழ்த்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

கமலி! என்னம்மா! ஏன்? எதற்காக அழுகின்றாய்? என் துக்க வரலாற்றுக்கு அனுதாபப்படும் அவள் அல்லாத ஓர் உயிரும் இவ்வுலகில் இருக்கின்றதா? என்றேன் ஆவேசத்துடன்.

ஐயா! அந்த "அவள்" நானேதான். என்னை மன்னிப்பீர்களா? என்று, அந்த நாள் நான் எழுதிய கடிதத்தை என் காலடியில் வைத்துப் புலம்பினாள் கமலி. எழுந்திரு—யார்? யாரை மன்னிப்பது" என்றேன்.

"என்று தாங்கள் இந்த வார்டிற்கு மாற்றப்பட்டீர்களோ அன்றே நான் தங்களிடம் கேட்கலாம் என்று நினைத்தேன். ஆனால் வேறு யாராவதாயிருந்தால் என்ன செய்வது என்ற எண்ணத்துடனே பேசாமலிருந்தேன்" என்று குமுறிய வண்ணம் என் மார்பிலே சாய்ந்தாள்! விடிந்தவுடன் எனக்கு விடுதலை!

வெளியில் செல்ல வழி தெரியாது என் உள்ளத்திலேயே சுழன்று சுழன்று கொண்டிருந்த வேதனைக்கும் என் இதயத்திலிருந்து விடுதலை! நர்சு வேலையிலிருந்து அவளுக்கும் விடுதலை! இருளென்னும் சிறையிலிருந்து நாளைய தினம் விடுதலை பெற்று ஒளி வீசப் போகின்றான் கதிரவன்! எங்கள் வாழ்விலும் ஒளி வீசப்போகிறது!

உரைகல்

திராவிடக் கழக லட்சியம்.

பெரியார். ஈ. வே. ரா.

நாட்டுமக்களின் வருங்கால நல்வாழ்வுக்கும் உண்மை விடுதலைக்கும் வழி செய்வதற்கென்றே திராவிடக் கழகம் கொண்டுள்ள இலட்சியத்தைக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் விளக்கியுள்ள இரு சொற்பொழிவுகளையும் ஒரு அனுபவஸ்தரின் உண்மை விளக்கத்தையும் கொண்டு வெளியிடப்பட்டுள்ள இந்நூலைப் பொது மக்கள் படித்துப் பயனுற வேண்டுகிறோம். விலை அணு 4

★

மொழி — எழுத்து

பெரியார். ஈ. வே. ரா.

தமிழ்மொழியின் புதுக்கால வளர்ச்சி அதன் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பொருத்தே அமையுமென்பது அறிஞர்கள் அறிந்த உண்மை. அத்துறையில் சில ஆண்டுகளுக்கு முன்பே — சீர்திருத்தத்தை நடைமுறையில் புகுத்திய பெரியாரவர்கள் — கல்லூரிகளில் — மொழிகுறித்து நிகழ்த்திய இரு சொற்பொழிவுகளைத் தாங்கி வெளிவந்துள்ளது இந்நூல். மொழிவளர்ச்சியை விரும்பும் எவரும் படிக்க வேண்டியதாகும். விலை அணு 4

★ கிடைக்குமிடம்: குடியரசுப் பதிப்பகத்தார், ஈரோடு.

யார் குற்றவாளி?

இயற்றியவர்: மாவண்ணு, தேவராசன்.

திரு. தேவராசன் அவர்களைத் தமிழுலகம் அவரது கவிதைகள் மூலம் னன்கறியும். தமிழ்மொழியின் சிறப்புக்கு அவரது கவிதைகள் அணிசெய்யத் தொடங்கி விட்டன, என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு — 'யார் குற்றவாளி?' என்ற நூல். சமுதாயம் தன் குற்றத்தை, யுணர்ந்து திருந்த — குற்றவாளியை — எளிய இனிய சுவைமிக்க தமிழ் நடையில் இழுத்து வந்து கூண்டிலே நிறுத்தியுள்ளார். குற்றவாளியைக் காண விழைவோர் இன் தமிழ்த்தேனையும் சுவைக்கலாம். விலை அணு 4

கிடைக்குமிடம்: இலக்குமி நூல் பதிப்பகம், திருவத்திபுரம். (வ. ஆ.)

திராவிடர் கழகம் — என்றால் என்ன?

எழுதியவர்: எல், வீராசன்.

திராவிடர் கழகத்தைக் குறித்த உண்மைகளை இச்சிறு நூலின்கண் விளக்கியுள்ளார். விலை அணு 2

கிடைக்குமிடம்: பாண்டியன் பதிப்பகம், கள்வார்பட்டி, காசிப்பாளையம் அஞ்சல், திண்டுக்கல் வழி.

நியூ ஜஸ்டிஸ்

(ஆங்கில வார வெளியீடு)

ஆசிரியர் : A. S. வேணு.

இவ்வார இதழின் ஆண்டு மலர், பல சிறந்த கட்டுரைகளுடனும், பெரியார், அறிஞர் அண்ணாதுரை ஆகியோரின் — கருத்தோவியங்களோடும், உருவப் படங்களோடும், மிகவும் அழகான முறையில் வெளியிடப் பட்டுள்ளது. இம்முயற்சியைப் பாராட்டுவதோடு, இவ்விதழை வாலிபர்கள் ஊக்குவிக்க வேண்டுகிறோம். மலர் விலை ரூபா 1.

கிடைக்குமிடம்: 7— நமசிவாய முதலித் தெரு, பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை 21.

திருவிடம்

(மாத மிருமுறை வெளியீடு)

ஆசிரியர் : சி. பி. தண்டாயுதபாணி

திராவிடக் கழகக் கொள்கைகளைத் தாங்கி, நாட்டுக்கான நற்றொண்டு புரிய, திருவிடம் மலர்ந்துள்ளது. விலை அணு 1½.

கிடைக்குமிடம்: 20 B மதங்கீஸ்வரன் கோவில் தெரு, காஞ்சிபுரம்

தமிழ்த் தொண்டன்

(மாத வெளியீடு)

ஆசிரியர் :

அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ.,

தமிழ்த்தொண்டாற்றும் தகுதிகள் யாவும் பெற்ற ஆசிரியரைக் கொண்டு வெளிவரும் இவ்வெளியீடு—சமயத் தொண்டையும் தமிழ்த் தொண்டென்று மயங்காது என எண்ணுகிறோம். 'தமிழ்'— இன்று சிறைக்கஞ்சா சிங்கங்களைத் தனது தொண்டாற்ற அழைக்கிறது தமிழ்த் தொண்டன் அத்தகு வீரர் வரிசையில் நின்று நிலவ வேண்டுமென விழைகின்றோம். விலை அணு 4.

கிடைக்குமிடம்: 130–இராசவீதி, பெரிய காஞ்சிபுரம்.

திராவிட முரசு

(மாத வெளியீடு)

ஆசிரியர்: ஜி. ஆர். மணி

திராவிட மக்களின் மறுமலர்ச்சிக்கும், உரிமை உணர்ச்சிக்கும்— மலேயாவினின்றும் இம்முரசு முழங்குகின்றது. விலை உள்நாடு 30 காசு; வெளிநாடு 8 அணு.

கிடைக்குமிடம்: திராவிட முரசு, 20, பப்லோ ரோடு, சிங்கப்பூர்.

இனமணி

(வார வெளியீடு)

ஆசிரியர்: த. வ. மு. மகாலிங்கம்

மலேயாவில் வாழும் திராவிட மக்களும் தமது தாய்நாட்டின் விடுதலைக்கான பணியில் துணைபுரியவும், சுயமரியாதையுடன் வாழவும், இனமணி கிழமை தோறும் ஒலித்து வருகின்றது. விலை உள்நாடு 10 காசு, வெளிநாடு 2½ அணு.

கிடைக்குமிடம்: ஸ்டார் பதிப்பகம், 75, பெல் பீல்டு ஸ்ட்ரீட், ஈப்போ.

எரிமலை

(வார வெளியீடு)

ஆசிரியர்: ஏ. கே. வேலன்

திராவிட மக்களின் உள்ளம் இதுவரையில் மாற்றாரால் இழுக்கப்பட்டு வந்துள்ள கொடுமைகளையும் அநீதிகளையும் எண்ணி எண்ணிப் புழுங்கி எரிமலைப் பக்குவத்தில் உள்ளது என்ற நிலையை நினைப்பூட்டும் பெயருடன் இது வெளிவந்துள்ளது. 'எரிமலை'யின் நிலை கண்டு நடப்பது எதிரிகளின் கடன்.

விலை அணு 1.

கிடைக்குமிடம்: செந்தமிழ்ப் பாசறை, கரந்தை, தஞ்சை.

கே. ஆர். ராமசாமியின்

கிருஷ்ணன் நாடக சபா

24-6-48 முதல்

திருச்சி ரெத்தினவேலு தேவர் ஹாலில்

★

அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,

எழுதிய

சரிதம் கலந்த சிந்தனைச் சித்திரம்

"சந்திர மோகன்"

நாடகம்

★

தினசரி இரவு 10-மணி : ஞாயிறு மாலை 6-30மணி

திங்கள் நாடகம் இல்லை

★

டிக்கட் : ரூ. 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0, 0-6-0

Edited and Published by K. Anbazhagan M.A., at 10, Vellala St., Madras-7. Printed by S. Kalappan at Oriental Printing Works, 5, Sunkurama Chetty St., Madras-1.